விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

Registered as a Newspaper in Srilanka

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 19 புதன்கிழமை (04.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

# புலிகள் சார்பு இயக்கங்களின் பிரசாரம் வெற்றியளிக்கிறது!

## நவிபிள்ளையின் வருகையும் அதுதான் என்கிறார் பாதுகாப்புச் செயலர்




விடுதலைப்புலிகளின் சார்பு இயக்கங்கள் புலம்பெயர் நாடுகளில் நடத்துகின்ற பிரசாரங்கள் ஓரளவு வெற்றி வெற்றிருக்கின்றன. இதன் விளைவுதான் ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைவிஜயம் எனபாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

# சிறுபான்மையின மக்களை அரசியலிலிருந்து அகற்ற முயற்சி

## அரசை சாடுகிறார் விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)

நாட்டின் அரசியலிலிருந்து சிறுபான்மையினரை அகற்ற அரசாங்கம் பல சதிமுயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கை யாழ்.மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையினை வெளியிட்டு வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஆயுதப் படைகள், இராணுவச் சாதனங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் ஆகியவற்றை வடக்குக் கிழக்கிலிருந்து அகற்றுவதன் மூலம் 1983இல் நிலவிய யுத்தத்திற்கு முந்திய சூழ்நிலை மீண்டும் ஏற்படும்.

இராணுவ பிரசன்னமற்ற நிலைமை மீண்டும் தமிழர் தாயக பூமியில் இருக்க வேண்டும்.

போர் காரணமாக வடக்குக் கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்திருந்த தமிழ் மக்கள் தமது முன்னைய இடங்களில் துரிதமாக மீள்குடியேற்றப்பட்டு வீடுகள், காணிகளும் வழங்கப்பட வேண்டும்.

இப்போது அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகள் பெரும்பான்மை சமூகத்தினருடைய நலன்களை மட்டும் யோசித்துக் கொண்டு சிறுபான்மையினர் பற்றி அதிகம் யோசிக்காமல் விடுவதாக உள்ளது.

முதலிலே பறங்கியர்கள், அதன் பின்பு தமிழர்கள், அதன்பின்பு முஸ்லிம்கள் என்று எங்களை (24ஆம் பக்கம் பார்க்க)

ஐக்கிய தேசியக் கட்சி



தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்



X 5

## நல்லூரானுக்கு இன்று தேர்



(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்புமிக்க ஈழத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று 7 மணிக்குஇடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று 7 மணிக்கு முருகப்பெருமான் தேரில் ஆரோகணிப்பார்.

நல்லூர்க் கந்தனின் தேர்த்திருவிழாவிற்கு இம்முறை யாழ்.மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் வெளி மாவட்டங்களிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-6)

## மோ. சைக்கிள் விபத்து; கணவன் பலி; மனைவி காயம்

(முல்லைத்தீவு)

கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள பாலத்துடன் மோதுண்டதில் கணவன் உயிரிழந்ததுடன் மனைவி படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் முல்லைத்தீவு அளம்பில் பிரதேச வைத்தியசாலைக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று கருநாட்டுக்கேணியைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான கந்தையா விஜயகுமார் (வயது - 36) என்ற குடும்பஸ்தரே பலியானவராவார்.

அவரது மனைவியான விஜயகுமார் சாந்தினி (வயது - 32) என்பவர் படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலமானது பிரேதப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-267)

## கிணற்றினுள் வீழ்ந்த சிறுமி உயிரிழப்பு

(மிருசுவில்)

கிணற்றுக்குள் தவறிவிழுந்த சிறுமியொருவர் மூச்சுத்திணறி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 6.45 மணியளவில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு என்னும் இடத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் முல்லைத்தீவு அளம்பிலைச் சேர்ந்த அனந்ததேவன் ஜசிந்தா (வயது - 11) என்னும் சிறுமியே பலியானவராவார்.

சடலமானது பிரேத பரிசோதனைக்காக மாஞ்சோலை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (24ஆம் பக்கம் பார்க்க)

## நவநீதம்பிள்ளை புலி ஆதரவாளர்

### ஹெல உறுமய சீற்றம்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர நவநீதம்பிள்ளை விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர். இவரிடம் இலங்கை நீதி கேட்க நினைப்பது வேடிக்கையாக உள்ளது. நாட்டுக்குள் (23ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு மாகாணசபைத்
தேர்தல் - 2013




ஈழமக்கள் ஜனநாயக கட்சியின்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்
சுந்தரம்
டிவகலாலா
முன்னாள் செயலாளர், கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை அமைச்சு, வடக்கு கிழக்கு மாகாணம்.
கல்வியின் ஊடாக அரசியல், சமூக, பொருளாதார மேம்பாடு.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# குழியொன்றிலிருந்து மனித எச்சங்கள் மீட்பு

அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்தில் குழியொன்றிலிருந்து மனித எச்சங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.காரைதீவு 8-ம் பிரிவில் அமைந்துள்ள காணியொன்றிலிருந்து இவ் எச்சங்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.காணியைத் துப்பரவு செய்த உரிமையாளர் குப்பைகளைப் புதைப்பதற்காக குழி ஒன்றை வெட்டியபோது மனித எச்சங்கள் தென்பட்டுள்ளன.

கடந்த 2004-ம் ஆண்டு சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் கரையொதுங்கிய பின்னர் இப்பகுதிகளில் புதைக்கப்பட்டதாகவும் அவற்றின் எச்சங்களாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ-11)

## SLEAS - பயிற்சி வகுப்பு

SLEAS பரீட்சைக்குத் தோற்றவுள்ள அதிபர், ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு கிளி/ மத்திய கல்லூரியில் 06/09/2013 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. கட்டணம் ரூ. 1500/- அனைவரையும் கலந்து பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதிபர் சங்கம், கிளிநொச்சி மாவட்டம்.

(சி- 4590)


## விற்பனைக்கு

TATA SUPER ACE
SUPER TURBO POWER A/C

தொடர்புகளுக்கு
0772689583

(3849)


## அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்

### விஜய வருட மஹோற்சவம் -2013

**கொடியேற்றம் ஆவணி மாதம் 19ம் நாள் (04.09.2013) புதன்கிழமை பகல் 10 மணிக்கு**



| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி 20ம் நாள் | 2ம் உற்சவம் | 05.09.2013 | உள்வீதி உலா | |
| ஆவணி 21ம் நாள் | 3ம் உற்சவம் | 06.09.2013 | உள்வீதி உலா | |
| ஆவணி 22ம் நாள் | 4ம் உற்சவம் | 07.09.2013 | உள்வீதி உலா | |
| ஆவணி 23ம் நாள் | 5ம் உற்சவம் | 08.09.2013 | உள்வீதி உலா | |
| ஆவணி 24ம் நாள் | 6ம் உற்சவம் | 09.09.2013 | உள்வீதி உலா | |
| ஆவணி 25ம் நாள் | 7ம் உற்சவம் | 10.09.2013 | செவ்வாய்க்கிழமை | வெளிவீதி உலா |
| ஆவணி 26ம் நாள் | 8ம் உற்சவம் | 11.09.2013 | புதன்கிழமை | குருக்கட்டு விநாயகர் தரிசனம் |
| ஆவணி 27ம் நாள் | 9ம் உற்சவம் | 12.09.2013 | வியாழக்கிழமை | வெண்ணைத் திருவிழா |
| ஆவணி 28ம் நாள் | 10ம் உற்சவம் | 13.09.2013 | வெள்ளிக்கிழமை | துகில் திருவிழா |
| ஆவணி 29ம் நாள் | 11ம் உற்சவம் | 14.09.2013 | சனிக்கிழமை | பாம்புத் திருவிழா |
| ஆவணி 30ம் நாள் | 12ம் உற்சவம் | 15.09.2013 | ஞாயிற்றுக்கிழமை | கம்சன் போர்த் திருவிழா |
| ஆவணி 31ம் நாள் | 13ம் உற்சவம் | 16.09.2013 | திங்கட்கிழமை | வேட்டைத் திருவிழா |
| புரட்டாதி 01ம் நாள் | 14ம் உற்சவம் | 17.09.2013 | செவ்வாய்க்கிழமை | சப்பறத் திருவிழா இரவு 7.00 மணிக்கு |
| புரட்டாதி 02ம் நாள் | 15ம் உற்சவம் | 18.09.2013 | புதன்கிழமை | தேர்த்திருவிழா |
| புரட்டாதி 03ம் நாள் | 16ம் உற்சவம் | 19.09.2013 | வியாழக்கிழமை | சமுத்திர தீர்த்தத் திருவிழா |
| புரட்டாதி 04ம் நாள் | 17ம் உற்சவம் | 20.09.2013 | வெள்ளிக்கிழமை | கேணித்தீர்த்தம் |
| | | | | பிற்பகல் 6.00 மணிக்கு கொடியிறக்கம் |

(சி-4587)

21.09.2013 சனிக்கிழமை பிராயச்சித்தம் ஆஞ்சநேயர் உற்சவம் பிற்பகல் ஆஞ்சநேயர் மடை

அறங்காவலர் சபை,
வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்,
துன்னாலை, புலோலி.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உறுப்பினர் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி அவர்களின் தாயார் திருமதி சிவசக்தி குகமூர்த்தி காலமானர்.

அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு விஞ்ஞானபீட ஆசிரியர் சங்கம் சார்பில் எமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். பல்கலைக்கழக
விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம்
(JUSTA)

(3851)


## Professional and Job oriented courses in Jaffna

### Business, IT and Hotel Management courses

Diploma /HND in Business Management

International Diploma in computer studies (IDCS)

CTH CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

Diploma in Tourism and Hospitality

Diploma in Hotel Management

### English courses

Basic English with spoken

English for work

English Teacher Training

IELTS CAMBRIDGE ENGLISH Language Assessment

### Specialized IT courses

Diploma in Information Technology-University of Colombo

Graphics and multimedia

CIW CompTIA A+

Web Designer IT support technician



**100 மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் திட்டம்**

- சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.
- இலங்கையில் உள்ள நிறுவனங்களில் பயிற்சித் திட்டம்/ வேலைவாய்ப்பு.
- உயர்கல்வி கற்பதற்குரிய இலகு வங்கிக்கடன் வசதிகள்.
- வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்புக்கள்

LONDON BUSINESS COLLEGE

Hot line 0775301299

36, Palaly Road, Kantharmadam, Jaffna

Vathiri Road, Uduppiddy Junction, Uduppiddy

168, A9 Road, Ananthapuram West, Kilinochchi

(C-4581)

## After A/Level

IT துறைக்கான உயர்கல்வி வெற்றிக்கான ஆரம்ப அடித்தளம்



Join @ ESOFT for

IT & English (Dual Diploma)

DiTEC INTERNATIONAL — Diploma in Information Technology

DiE — Diploma in English

3 — சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு IT டிப்ளோமா

இலவச கற்கை நெறிகளுடன்

FREE Pendrive

- Accelerated Skills Acquistion Program
- Diploma in Computerized Accounting
- Banking in Financial Accounting

புதிய பிரிவுகள்
2013.09.06 காலை 9 : 00 மணி

ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna
Tel: 021 222 4142 | 077 309 9 308

ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network

www.esoft.lk 50 நாடளாவிய கிளைகள் 2012ல் மட்டும் 20,000 மாணவர்கள்

(C-4589)

## விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!

உள்நாடு வெளிநாடுகளுக்கான துரிததபால்கள் பொதிகள் DHL சேவை திருமுருகன் கொம் நெற்

உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள், புடைவைகள் CD, VCDகள் என்பன மிக விரைவாக அனுப்பிவைக்கப்படும்.
11 kg இக்கு மேற்பட்ட பொதிகளுக்கும் மிக குறைந்த கட்டணம் அறவிடப்படும்.
தற்பொழுது இலங்கையில் எங்கும் இல்லாதவாறு மிகக் குறைந்த கட்டணத்தில்.

**விசேட சலுகை!**

10-30 வீதம் வரையான விலைக்கழிவு!!
31.07.2013 வரை மட்டுமே



திருமுருகன் கொம் நெற் தற்பொழுது எமது பழைய இடத்தில் சேவையை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். - 021 222 7835
(ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. இல.46, அடியபாதம் வீதி, திருநெல்வேலி

DHL EXPRESS TCN Express
இல. 2B, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6

(C-4593)

# நவி அம்மை ஆய்வுகளை நடத்தலாம் கட்டளை பிறப்பிக்க முடியாது

## அமைச்சர் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

**ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் கட்டளையை ஒருபோதும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று குறிப்பிட்டுள்ள அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, நவநீதம்பிள்ளையால் இலங்கைக்கு எவ்வித கட்டளைகளையும் பிறப்பிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

அத்துடன் எமக்கு நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் முக்கியமானதல்ல. நாம் நினைத்திருந்தால் அவரின் இலங்கைப் பயணத்தைத் தடுத்திருக்கலாம்.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம் தொடர்பிலும் அவரது சந்திப்புகள் மற்றும் அவரின் கருத்துக்கள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஊடகவியலாளருக்கு தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது எனக் கூறப்பட்டாலும் அரசின் பங்காளிக் கட்சிகள் அவரது பயணத்தை சாடுகின்றனவே என்ற கேள்விக்கு கூட்டணி அரசின் ஜனநாயகம் என்பது இதுதான். பங்காளிக் கட்சிகளிடையே பல்வேறு கருத்துகள் இருக்கின்றன. எனினும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் எடுக்கும் முடிவுகளை ஏற்று அவற்றைப் பாதுகாக்கும் கட்சிதான் சுதந்திரக்கட்சி என்றார்.

இவ்வாறான செயற்பாடுகள் சர்வதேச மட்டத்தில் இலங்கை அரசுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தமாட்டாதா என்ற கேள்விக்கு, அவ்வாறு எதுவும் ஏற்படாது. சர்வதேசம் கூட கருத்துச் சுதந்திரத்தைத்தானே வலியுறுத்தி நிற்கின்றது என்றார். கொழும்பில் நவநீதம்பிள்ளைக்கு எதிரான ராவண பலயவின் ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் அரசாங்கம் செயற்பட்டது எனக் கூறப்படுகின்றதே என வினவப்பட்ட மற்றுமொரு கேள்விக்கு, இல்லை. எதிர்ப்புநடவடிக்கைகளுக்குச் சுதந்திரம் வழங்குமாறுதானே மனித உரிமை அமைப்புகள் தெரிவிக்கின்றன என்றார்.

அதேவேளை, அரசாங்கத்தின் அழைப்பிலா நவநீதம்பிள்ளை இங்கு வந்துள்ளார் என்ற கேள்விக்கு, நுழைவு அனுமதி வழங்காது அவரது பயணத்தை நாம் தடுத்திருக்க முடியும். ஆனால், நாம் அவ்வாறு செய்யவில்லை. இங்கு ஒழிப்பதற்கு ஒன்றுமில்லை. எனவே, நவிபிள்ளைக்கு நிலைமைகளைப் பார்வையிடுவதற்கு முழு அதிகாரத்தையும் சந்தர்ப்பத்தையும் வழங்கியுள்ளோம் என்றார்.

வடக்கு, கிழக்கிலிருந்து தேவையற்ற படையினரை அகற்றவேண்டும். போர்க்குற்றங்கள் தொடர்பில் நம்பகத்தகுந்த உள்நாட்டு விசாரணைகள் நடைபெறாவிடின் சர்வதேச விசாரணையைத் தவிர்க்க முடியாது என்று ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளாரே? என்ற கேள்விக்கு, நவநீதம்பிள்ளை இங்கு வந்து ஆய்வு களை நடத்தலாம். ஆனால், அவரால் கட்டளையைப் பிறப்பிக்க முடியாது. இந்தக் கட்டளைகளை அரசு ஏற்றுக்கொள்ளாது என்று அமைச்சர் குறிப்பிட்டார். அதேவேளை, நவநீதம்பிள்ளையின் இல ங்கை வருகையையொட்டி முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டிருந்த தனி படை முகாம்கள், தூர பாதுகாப்பு காவலரன்கள் ஆகியவற்றை அரசாங்கம் அகற்றியுள்ளது எனக் கூறப்படும் குற்றச்சாட்டையும். அவர் நிராகரித்துள்ளார். (அ-2)

## பாக். பொலிஸார் இலங்கை வருகை

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் விசாரணை நடத்த பாகிஸ்தான் பொலிஸார் இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

பாகிஸ்தானிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்த 250 கிலோ கிராம் எடையுடைய போதைப் பொருள் அண்மையில் மீட்கப்படிருந்தது.

குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த பாகிஸ்தான் பொலிஸார் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

உலகப் போதைப் பொருள் கடத் தல் சார் ஒருவரின் ஒத்துழைப்புடன் இந்தப் போதைப் பொருட்கள் கடத் தப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகி றது. (அ-2)












# இன்று ஒரு தகவல்

## உயர்ந்த நோக்கம்

நண்பர் ஒருத்தர் நடந்து போய்க் கொண்டிருந்தார். நானும் அவருடன் போய்க் கொண்டிருந்தேன். அவருடைய நடை இருக்கே... நிமிர்ந்த நன்னடை! நேர் கொண்ட பார்வை! குதிரைபோல் போய்க் கொண்டிருந்தார்.

"எப்பவுமே நீங்கள் இப்படித்தானா?" என்றேன்.

"உயர்ந்த நோக்கத்தை நாடிச் செல்லக்கூடிய ஒரு மனிதன் பந்த பாசத்துக்கு அடிமைப்பட்டோ அல்லது வேறு காரணத்துக்காகவோ தான் போய்க் கொண்டிருக்கும் நோக்கத்தை மறந்து பின்னாலே தான் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்க முற்பட்டால் அவருடைய முன்னேற்றம் தடைப்படும். அவனுடைய எண்ணம் ஈடேறாமல் போய்விடும்" என்று ஒரு விளக்கம் கொடுத்தார்.

"இது என்ன விளக்கம்?" என்றேன். "பகவத் கீதை விளக்கம்" என்றார். அத்துடன் விடவில்லை அதற்கான கதையையும் சொன்னார். நானும் கேட்டுக் கொண்டே அவரோடு நடந்து போனேன். அவர் சொன்ன கதை இதுதான். பாரத யுத்தம் முடிந்தவுடன் பலராமும் கிருஷ்ணனும் இந்த பூவுலகத்தை விட்டு பரலோகத்துக்கு போய்ச் சேர்ந்துவிட்டார்கள்.

அர்ஜுனன் ஒருமாதிரியாகிவிட்டான். அவன் அதுவரைக்கும் கற்று வைத்திருந்த அஷ்திர சாஸ்திரங்களையெல்லாம் மறந்தே போய்விட்டான். வியாச பகவான் பார்த்தார். அர்ஜுனா! நீயும் உன்னுடைய சகோதரர்களும் இந்த மண்ணுக்கு வந்த நோக்கம் முடிந்து விட்டது. அதனால் தான் நீ கற்ற வித்தையெல்லாம் மறந்துவிட்டாய். இனிமேல் இந்த உலகத்தில் உங்களுக்கு வேலையில்லை. நீங்கள் புறப்படலாம் என்றார்.

அவருடைய உபதேசப்படி பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் சொர்க்கத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். முறைப்படி இந்தப் புண்ணிய பூமியை வலம் வந்து மேருமலைக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கேயிருந்த மணல் வெளிக்கு வந்து சேர்ந்ததும்... பாஞ்சாலி முதலில் மாண்டு மண் ணில் விழுந்தாள்.

"திரௌபதி மரணமடைந்த காரணம் என்ன?" என்று பீமன் தருமரிடம் கேட்டான். தருமர் பின்புறமும் திரும்பாமலேயே பதில் சொன்னார். "நம் ஐந்து பேரில் அர்ஜுனன் மீது மட்டும் அவள் அலாதியான அன்பு வைத்திருந்தாள். அவளுடைய பாராபட்சம் அவளைக் கொன்று விட்டது" என்று சொல்லிக் கொண்டே தான் போகும் பாதையில் முன்னேறிக் கொண்டே இருந்தார்.

கொஞ்ச நேரத்தில் சகாதேவன் மடிந்து விழுந்தான். "இதற்கு என்ன காரணம்?" என்று பீமன் கேட்டான். "சாஸ்திர ஞானத்தில் எனக்கு நிகர் யாரும் இல்லை. கல்விச் செருக்கினால் அவன் இறந்து போனான்." என்று விளக்கம் கொடுத்தார் தருமர்.

பின்னால் திரும்பிப் பார்க்காமல் தன்னுடைய வழியிலேயே அவர் போய்க்கொண்டிருந்தார்.

அடுத்த படியாக நகுலன் விழுந்தான். "அவனுக்குத் தான் மிகவும் அழகானவன் என்று எண்ணம் உண்டு. தனது மேனியழகைப் பற்றிய அந்தத் தற்பெருமைதான் அவனை வீழ்த்தி விட்டது" என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் தருமர். தொடர்ந்து போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அர்ஜுனன் அடிபட்ட மான் போல மாண்டு போனான்.

இதையும் திரும்பிப் பார்க்காமல் தன்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் பீமனிடம் அதற்கான காரணத்தைச் சொன்னார் தருமர். நடந்து முடிந்த பாரதப் போரில் சுத்த வீரர்களுடைய கடமையை இவன் மறந்துவிட்டான். தான் ஒருத்தனாகவே எதிரிகளை வீழ்த்த வேண்டும் என்று நினைத்தான். அந்த வீறாப்பு அவனை அழித்து விட்டது" என்றார்.

சிறிது தூரத்தில் பீமனும் கீழே விழ ஆரம்பித்தான். "அண்ணலே எனக்கும் அழிவு காலம் ஆரம்பமாகிவிட்டது... என்னுடைய சாவுக்கு என்ன காரணம்?" என்று மண்ணில் விழுந்து உருண்டு கொண்டே கேட்டான்.

"உன்னுடைய உடல் வலிமையைப் பற்றி உன் உள்ளத்தில் கொண்ட எண்ணம் உன்னுடைய சாவுக்கு காரணம்" என்று சொல்லிவிட்டு... திரும்பிப் பார்க்காமல் தனியாக அவர் பாட்டுக்குப் போய்க் கொண்டிருந்தார். அங்கே தருமரை எதிர் கொண்டு அழைக்க இந்திரன் தனது விமானத்துடன் காத்துக் கொண்டிருக்கிறான். இந்திரன் தருமரிடம் கேட்டான்.

"மடிந்த உன்னுடைய மனைவி மாண்டு போன உன் சகோதரர்கள் இவர்கள் எல்லாம் மண்ணில் விழுந்த போதும் நீ திரும்பிக் கூடப் பார்க்காமல் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்ததற்கு என்ன காரணம்" என்று கேட்டான். அதற்கு தருமர் அமைதியாக பதில் சொன்னார்.

"உயர்ந்த நோக்கத்தை நாடிச் செல்லும் ஒரு மனிதன் பந்த பாசத்துக்கு அடிமைப்பட்டோ அல்லது வேறு காரணத்துக்காகவோ தான் செல்லும் நோக்கத்தை மறந்து பின்னால் தான் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்க முற்பட்டால் அவனுடைய முன்னேற்றம் தடைப்படும். அவனுடைய எண்ணமும் ஈடேறாமல் போய்விடும். இதுதான் தருமரின் பதில்.

சிந்திக்க வேண்டிய ஒரு கருத்துத்தான் இது. இந்தக் காலத்தில் நம்ம ஆளுக்கு யாராவது இப்படி பின்னாடி வருபவர்களைத் திரும்பிப் பார்க்காமல் நேராக நடந்து போய்க் கொண்டிருந்தால்... அவனுக்குப் பின்னாடி அவனுக்குக் கடன் கொடுத்தவன் வந்து கொண்டிருக்கிறான். என்று அர்த்தம். ஒருநாள் எனக்கு முன்னால் என் சிநேகிதன் ஒருத்தன் திரும்பிப் பார்க்காமல் விறைப்பாக போய்க் கொண்டிருந்தான்.

நான் ஓடிப்போய் அவனுடைய கையைப் பிடித்துக் கொண்டு "ஏன்டா இப்படி பயப்படுகிறாய்? என்னிடம் நீ என்ன கடனா வாங்கியிருக்கிறாய்?" என்று கேட்டேன். இப்பொழுதும் அவன் முகத்தைத் திருப்பாமலே பதில் சொன்னான். "உன்னிடம் நான் ஏதும் கடன் வாங்க வில்லை என்பது சரி... ஆனால் என்னிடம் கடன் வாங்கிய ஒருத்தன் இப்பொழுது என் முன்னால் போய்க் கொண்டிருக்கிறான். அவன் என் கண்ணிலிருந்து தப்பிப் போய்விடக் கூடாதென்பதற்காகத் தான் நான் கழுத்தைத் திருப்பாமல் முன்னேறிக் கொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு முன்னால் போற ஆசாமியைக் குறிபார்த்து நடந்து போய்க் கொண்டிருந்தான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# சர்வதேச விசாரணைகளை முதலில் கோரியது ஜனாதிபதியே

## மங்கள எம்.பி தெரிவிப்பு

இலங்கையில் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோரி அது குறித்து ஆவணங்களை ஜெனீவாவுக்கு எடுத்துச் சென்று மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முதலில் முறையிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதனை இன்று மீறிச் செயற்படுகின்றார் என பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை நடவடிக்கைகள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என முன்பு எடுத்துக் கூறிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே அதனை இன்று மீறியுள்ளார் என்ற தலைப்பில் ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

இந்நாட்டில் மனித உரிமையை பாதுகாப்பதற்காக யார் முன்வந்தாலும் அவர்களோடு இணைந்து செயற்படுவதற்கு தான் தயார் என கடந்த 1990 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

எனினும் அன்று ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அவருக்குத் தேசத்துரோகி என்ற பட்டத்தை வழங்குவதற்கு ஊடகங்கள் மூலம் எவ்வித நட வடிக்கையும் எடுக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அது குறித்த விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கையில் மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கியது. ஜே.ஆர். ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ, டி.பீ. விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது ஆட்சிக் காலத்தில் இவ்வாறானதொரு சிறந்த ஆட்சி முறையே நடைபெற்றது.

இந்நாட்டின் உண்மை நிலை குறித்து அறிந்து கொள்வதற்காக சர்வதேசங்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டதுடன் மனித உரிமைகள் தொடர்பாக மஹிந்த ராஜபக்ஷ உட்பட்ட பிரமுகர்கள் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு முன் வைத்த முறைப்பாடு குறித்து தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பமும் வழங்கப்பட்டது.

இந்நிலையில் இலங்கையின் நடவடிக்கைகள் குறித்த விசாரணைக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்களுக்கும் 2005 ஆம் ஆண்டிலேயே தடைவிதிக்கப் பட்டது.

இலங்கையில் மனித உரிமை குறித்து சர்வதேச விசாரணை அவசியம் என்று ஐக்கிய நாடுகள் சபையிடம் முதலில் முறைப்பாடு செய்த மஹிந்த ராஜபக்ஷ 2005 ஆம் ஆண்டு அதற்கான தடையை விதித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவைச் சந்தித்து இலங்கை யின் மனித உரிமையைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்ததுடன் அது குறித்து அறிக்கையொன்றை சமர்ப்பித்ததாகவும் கூறியது.

இதற்கிணங்க கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை அமைத்து அவர்களின் சிபாரிசுக்கு ஏற்ப நடைமுறைப்படுத்துவதாகவும் உறுதி அளித்தது. அதே வேளை ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு இலங்கைக்கு வருகை தருமாறும் அழைப்பு விடுத்தது.

மேற்படி நடவடிக்கையை ஏற்பாடு செய்த அரசாங்கமே இன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக் குழு மற்றும் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை ஆகியோர் மீது குற்றஞ் சாட்டி அதில் இருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கின்றது.

இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகள் காரணமாக இந்நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் இன்று சர்வதேசத்தின் அபகீர்த்தியை சம்பாதித்துள்ளது.

ஆகவே இந்நிலையிலிருந்து நாட்டையும் மக்களையும் பாதுகாத்துக் கொள்ளும் முதல் நடவடிக்கையாக 17 ஆவது அரசியலமைப்பு சட்டத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கு ஐ.தே கட்சியினரால் கொண்டு வரப்படவுள்ள அரசியலமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து சுதந்திரமானதும் நேர்மையானதுமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கு அனைவரும் ஒன்றுபட வேண்டும்.

17 ஆவது அரசியலமைப்புச் சட்டத்தை மீண்டும் ஏற்படுத்துவது மிகவும் முக்கியமாகும். 17 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்தை வளப்படுத்துவதற்கு அரசு எதிர்ப்புத் தெரிவிக்குமாயின் நவநீதம்பிள்ளை கூறிய இலங்கை எதேச்சாதிகாரப் போக்கில் செல்கின்றது என்ற கருத்தை அரசாங்கமே நிரூபிப்பதாகவே அமைந்து விடும் எனவும் கூறினார். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 110 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 50 | 100 |
| தக்காளி | 50 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 50 | 60 |
| கோவா | 60 | 60 | 80 |
| கரட் | 60 | 70 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 60 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 170 | 100-140 | 200 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 120 |
| பாகற்காய் | 60 | 40 | 80 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 30 | 30 | 60 |
| லீக்ஸ் | 90 | 100 | 120 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 60 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 80 | 100 |
| போஞ்சி | 100 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 10 | 25 | 30 |
| தேசிக்காய் | 250 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 35-40 |
| இராசவள்ளி | 60 | 90 | 120 |

# இராசி பலன்

04.09.2013
(ஆவணி 19, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தசி பிற்பகல் 5.08 மணிவரை
ஆயிலியம் காலை 6.20 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
நல்லைக்கந்தன் தேர்,
போதாயண அமாவாசை

**மேடம்**

பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், இனிய தகவல்கள் வந்து சேரும் நாள், வசதி வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள்.

**இடபம்**

வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், கந்தன் வழிபாடு காரிய வெற்றி தரும், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், கல்வியில் மேன்மையுண்டு.

**மிதுனம்**

நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், கோயில் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்**

உங்கள் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, புதிய திட்டங்களில் முன்னேற்றமுண்டு, போசன சுகமுண்டு.

**சிங்கம்**

இறை வழிபாட்டால் இனிமை காண வேண்டிய நாள், தேவையற்ற கற்பனைகளைகளை வளர்த்துக் கொள்வீர்கள், நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள்.

**கன்னி**

சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், காரிய அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், ஆறுமுகப் பெருமானை வழிபட்டு ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்**

பணப்புழக்கம் அதிகரிக்கும், எதிர் கால வெற்றிக்கு திருப்புமுனையான நாள், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம்.

**விருச்சிகம்**

புதிய திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், பெருமை மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகமான நாள்.

**தனுசு**

தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு, மாற்றுச் கருத்துடையோர் மனம் மாறுவர்.

**மகரம்**

சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பிரயாண பயமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை, தேவைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கும்பம்**

இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், இல்லத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்று செய்து முடிப்பீர்கள்.

**மீனம்**

காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, நோய்கள் குணமாகலாம், சுவாரஸ்யமான நாள், செய்தொழில் மேன்மை யுண்டு, தெய்விக சிந்தனை மேலோங்கும்.

வளவன்

# காணாமற் போனோர்கள் குறித்து இறுதி முடிவு எட்டப்பட வேண்டும்

## தேர்தல் அறிக்கையில் த.தே.கூட்டமைப்பு வலியுறுத்து

காணாமற்போன ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்பாக இறுதி முடிவொன்று எட்டப்பட வேண்டும் என்பதோடு குற்றச்சாட்டுகளின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் விரைவாக விடுதலை செய்யப்படவேண்டுமெனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபைத் தேர்தல் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜாவினால், யாழ். மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தின்போது வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்கள் ஒரு தனிச் சிறப்பு மிக்க தேசிய இனமாகும் என்பதோடு சிங்கள மக்களோடும் ஏனையவர்களுடனும் சேர்ந்து இலங்கைத் தீவில் வாழ்ந்து வந்துள்ளனர் என்பது முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆயுதப்படைகள், இராணுவச்சாதனங்கள் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் ஆகியவற்றை வடக்குக் கிழக்கிலிருந்து அகற்றுவதன்மூலம் 1983 இல் நிலவிய யுத்தத்திற்கு முன்னைய சூழ்நிலை மீண்டும் ஏற்படும் வகையில் காத்திரபூர்வமான இராணுவப் பிரசன்னமற்ற நிலைமை இருக்க வேண்டும் என முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது.

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நீடித்து நிலைக்கத்தக்க ஒரு தீர்வைப் பெறுவதற்கான உரிமை உண்டு என்பதோடு அவர்களுக்கு தமது முற்சிகளில் அடிக்கடி உதவியும் தேவை.

கடந்த 1990 ஆம் ஆண்டிற்கு முன்னர், வடமாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள், தாம் வாழ்ந்த பகுதிகளில் பாரம்பரியக் குடிகளாக இருந்துள்ளனர். அவர்கள் தமது சொத்துக்களைக் கைவிட்டு, நாட்டின் ஏனைய பாகங்களுக்கு சென்று சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டமை வருந்தத்தக்கதாகும்.

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லிம்களும் இயன்ற வரை விரைவாக தத்தமது பகுதிகளுக்கு திரும்பிச் சென்று வாழ்வாதாரத் தொழில்களை மீண்டும் தொடங்குவதை உறுதிப்படுத்துவதில் நாம் பற்றுறுதி கொண்டுள்ளோம்.

யுத்தம் வடமாகாணத்தில் மாத்திரம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விதவைகளை விட்டுச் சென்றுள்ளது. எனவே, அவர்களது தற்போதைய துயர் நிலையைத் துடைப்பதற்கு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டங்களையும் ஏனைய தேவையான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கான பொறுப்பினை இம் மாகாண சபை விரைவாகவும் வினைத்திறனோடும் ஏற்றுச் செயற்படும்.

யுத்தம் முடிவுற்ற நான்கு ஆண்டுகளின் பின்னர் இன்னமும் அரசாங்கம் உயர் பாதுகாப்பு வலயங்களாக அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வலயங்களாகப் பல காணிப் பகுதிகளை அறிவித்து அப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் அங்கு சென்று மீள்குடியேறவிடாது தடுக்கின்றது.

வடக்கு கிழக்கில் அரசாங்கம் காணிகளை பலவந்தமாக கையகப்படுத்துதல் மற்றும் பயன்படுத்தல் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான அவசரத் தேவையொன்று நிலவுகின்றது.

### சட்டமும் ஒழுங்கும்

வடமாகாணம் சட்டமும் ஒழுங்கும் தொடர்பான நெருக்கடியொன்றை எதிர்கொள்கின்றது. அதனால், மக்கள் அச்சத்தினாலும் பாதுகாப்பின்மை உணர்வினாலும் ஆட்டிப் படைக்கப்படுகின்றனர். குற்றம் புரிவோர் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒருவாறு தப்பித்துச் சென்றுவிடுகின்றனர். தமது மனித உரிமைகள் பாரதூரமாக மீறப்பட்டமையினால் பாதிப்புற்ற மக்களுக்கு நீதியோ அன்றி பொறுப்புக்கூறவோ இல்லை.

எந்த ஒரு மாகாண சபையும் தொழில் இன்மைப் பிரச்சினையைக் கையாளவே விரும்பும். எனவே, அதனைச் செய்வதற்கு அதற்கு அதிகாரம் தேவை. உண்மையில் வடமாகாணத்தில் நிலவும் தொழிலின்மையின் மூல காரணங்களை அகற்றுவது த.தே.கூவின் முன்னுரிமைகளுள் ஒன்றாகும்.

இம்மாகாணத்தில் நிலவும் நீண்டகால முதலீடு மற்றும் உதவிப்பிரச்சினைகளை தீர்த்துவைக்க த.தே.கூ, இலங்கை அரசுடனும் சர்வதேச சமூகத்துடனும் புலம்பெயர் தமிழர்களுடனும் இணைந்துசெயற்படும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்சியையும்நலச் செழிப்பையும் பெற்றுக்கொள்வதில் புலம் பெயர் தமிழர் கள் ஒரு முக்கிய அம்சமாகும். எனவே, அபி விருத்தித் துறையில் மட்டுமன்றி, நீதியானதும் நடைமுறைச்சாத்தியமானதும் நீடித்து நிலைக்கக்கூடியதுமான ஓர் அரசியல் தீர்வைக் காண்பதற்கான எமது அரசியல் குறிக்கோளை அடைவதற்கு அவர்களது பெறுமதி மிக்க உதவியையும் நிபுணத்துவத்தையும் பெற்றுக்கொள்வோம்.

உள்நாட்டு நடைமுறைகளூடாகத் தேசிய இனப்பிரச்சினையின் நியாயானதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான ஒரு தீர்வுக்காக தமிழ் மக்கள் எப்போதும் பற்றுறுதியுடன் பணியாற்றியுள்ளனர். இலங்கை அரசுதான் இவ்வாய்ப்புகளை வீணடித்து மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்பட்ட தமிழ் மக்களுக்கெதிரான இன அழிப்பு செயல்களின் மூலம் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்க முயன்றது.

இலங்கையரசின் இத்தகைய நடத்தைதான் தேசிய இனப்பிரச்சினையை சர்வதேசமயமாக்கி சர்வதேச வகிபாகத்தை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசை நிர்ப்பந்தித்தது.

ஒரு மக்கள் குழாம் என்ற வகையில் எமக்கேயுரிய தனித்துவத்தைப் பேணுகின்ற அதே வேளை எமது மக்களின் வாழ்க்கை மீளக் கட்டியெழுப்பப்பட வேண்டும். ஒரு தேசிய மக்கள் குழாமென்ற வகையில் எமது அரசியல் உரிமைகளையும் நாம் மீட்டெடுக்க வேண் டும் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)


வடமாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்

(EC/4950)

எனதருமை மக்களே !

கடந்த முப்பது ஆண்டு கால யுத்தமும் அதன் முடிவும் மிகவும் கசப்பானவை. உயிர், உடமை, ஓங்கிய வளம் என அழிந்து போனவை பல. இந்த அழிவுகளிலிருந்து மீண்டும் எழுவதற்கு வாய்ப்பாக, இருபத்தைந்து வருடங்களின் பின்னர் நடைபெறப் போவதுதான் இந்த மாகாண சபைத் தேர்தல்.

இதுவரை காலமும் எதிர்ப்பு அரசியலின் மூலம் சாதிக்க முடிந்தவை எவை? அபிவிருத்திப் பாதையில் எம் வாழ்வை வளப்படுத்துவதனூடே உரிமைகளைச் சாத்தியமாக்குவதே சிறப்பானதாகும்.



X 1

அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)

எங்களின் நேர்மை
உங்களின் நம்பிக்கை

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1

## வலம்புரி செய்தியையடுத்து

# ஆபத்தான கிணறுகளை மூட உரிமையாளர்கள் சம்மதம்

(கரணவாய்)


750 வழித்தடத்தின் அருகாமையில் ஆபத்தான முறையில் காணப்பட்ட கிணற்றை மூடுவதற்கு காணி உரிமையாளர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆபத்துக்குரிய கிணற்றை மூடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென வலம்புரி பத்திரிகை சுட்டிக்காட்டியிருந்தது.

இதனையடுத்து காணி உரிமையாளர்கள் கிணற்றை மூடுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளனர்.

ஆயினும் கிணறு மிக ஆழமாகவுள்ளதனால் அதனை மூடுவதற்கு தம்மிடம் வசதியில்லை எனவும் இதற்கு கரவெட்டி பிரதேச சபையினர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கரவெட்டிப் பிரதேசத்தின் பிரதான வீதியில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் காணப்பட்ட இக்கிணற்றை மூடுவதற்கு ஒப்புதல் அளித்த காணி உரிமையாளர்களின் செயலை மக்கள் பாராட்டியதுடன் கரவெட்டி பிரதேச சபையினர் கிணற்றை துரிதகதியில் மூடிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-60)



# இப்படியும் பணம் வசூலிப்பு!

கரணவாய் பிரதேசத்தின் குஞ்சர் கடைப் பகுதியிலிருந்து நாவலர்மட வீதிவரை புனரமைப்பு பணியில் ஈடுபட்ட மேற்பார்வையாளர் மக்களிடம் பணம் பெற்ற விடயம் அம்பலமாகியுள்ளது.

மேற்படி வீதி அகலிப்பு பணிகள் இடம்பெற்று வந்தவேளை ஒப்பந்தகாரர்கள் ஊடாக மேற்பார்வையாளர் பணியில் ஈடுபட்டவர் அப்பகுதியிலுள்ள மக்களின் வீடுகளின் வாசல் பகுதிகளுக்கு வீதி இடவேண்டுமாயின் 1500 ரூபாவைத் தன்னிடம் தருமாறு கோரியதுடன் சிலரிடம் பணத்தையும் பெற்றுள்ளார்.

அத்துடன் பணத்தை வழங்காதவர்களின் வீடுகளுக்கு முன்னால் வீதிகளும் இடப்படவில்லை.

இவ்விடயம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினருக்கு தெரியவந்ததையடுத்து மக்களிடம் அவர் பெற்றுக்கொண்ட பணத்தை மீளளிக்குமாறு மேற்பார்வையாளரைப் பணித்ததுடன் பொது மக்களை இச்சம்பவம் தொடர்பில் கடிதமொன்றை எழுதி தம்மிடம் தருமாறும் பணித்துள்ளார்.

குறித்த மேற்பார்வையாளர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதென்றும் சபையினர் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (அ-9-60)

## சட்டவிரோதமாக பனைகள் தறிக்கப்படுகின்றன
### நடவடிக்கை எடுக்குக

(கரணவாய்)

வரணி தில்லையம்பலப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள குளத்தடிக் காணியில் சட்டவிரோதமாக பனைமரங்கள் தறிக்கப்பட்டுள்ளதாக காணி உரிமையாளர் கவலை வெளியிட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் திங்கட் கிழமை சன நடமாட்டமற்ற நேரத்தில் இடம் பெற்றுள்ளது.

இக்காணியிலிருந்த 2 பனை மரங்கள் முற்றாக தறிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறாக அதிகரித்து வருகின்ற திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்தவும் பயன் தரும் மரங்களைப் பாதுகாக்கவும் உரியவர்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)




# செயலமர்வு

(தும்பளை)

வடமாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு வடமராட்சியிலுள்ள சிரேஷ்ட, கனிஷ்ட உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான விசேட செயலமர்வொன்று இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது (அ-9-19)

# வீதி புனரமைப்பிற்கான சமிக்ஞைகள் இல்லை

## உயிராபத்து ஏற்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். துரையப்பா விளையாட்டரங்கிற்கு பின்புறமாக கோட்டையை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதிபுனரமைப்பு பணிகள் உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் இன்றி இடம் பெற்று வருகின்றன.

இது தவிர குறித்த வீதி புனரமைப்பு செய்யப்படுவதற்கான எந்தவொரு வீதி சமிக்ஞைகளும் காட்சிப்படுத்தப்படவில்லை. இதனால் வீதி விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும் வீதியின் கீழ்ப்பகுதியில் நீர் பாய்வதற்கு ஏற்ற வகையில் கான்



அமைப்பதற்காக வெட்டப்பட்ட பாரிய குழிகள் வீதியின் மருங்கில் இரும்புக் கம்பிகளுடன் அபாயகரமான முறையில் காட்சியளிக்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-6)

# உரும்பிராய் இந்துவில் யாழ்ப்பாணத்தின் சமர்


(மானிப்பாய்)

ஊரெழு றோயல் விளையாட்டு கழகத்தினரால் நடத்தப்பட்டு வருகின்ற யாழ்ப் பாணத்தின் சமர் என்னும் அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

யாழ். மாவட்டத்தின் மூன்று காற்பந்தாட்ட லீக்கிற்குட்பட்ட 64 அணிகள் பங்கு பற்றும் சுற்றுப் போட்டிகள் விலகல் முறையில் நடைபெற்று வருகின்றன.

இதில் நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணிக்கும் நவக்கிரி எல்லாளன் அணிக்கும் இடையில் இடம் பெற்ற போட்டியில் நவிண்டில் கலைமதி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது.

தொடர்ந்து, அராலி மாவத்தை விளையாட்டுக் கழகமும், பொலிகண்டி விண்மீன் விளையாட்டுக் கழகமும் மோதியதில் பொலிகண்டி விண்மீன் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. (அ-9-23)





யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்து கருணாரத்னவின் வழிகாட்டலும் காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் லலித் பத்திநாயக்கவின் வரவேற்பிற்கிணங்கவும் காங்கேசன் துறை தலைமை பொலிஸ் நிலையம் நேற்றைய தினம் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்திற்கு அருகாமையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை இடம் பெறுவதையும் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் அணிவகுப்பு மரியாதையை ஏற்பதனையும் பொலிஸ் நிலைய கட்டடத்தை திறந்து வைப்பதனையும் படங்களில் காணலாம்.

படங்கள் : உ. சாளின்

# பெருகிவரும் மண முறிவு! பிரியாமலிருக்க என்ன வழி?

ஒரு மனிதன் எத்தனை கல்வி கற்று எவ்வளவு பெரிய உத்தியோகம் பார்த்தாலும் மனைவி, குழந்தைகள் என்று குடும்பம் அமைந்த பின்தான் ஒரு ஆணையோ, பெண்ணையோ முழு மனிதனாக மதிக்கிறார்கள். எனவேதான் காட்டில் தவமிருக்கும் துறவியைவிட இல்லறத்தான் மேலானவன் என நம் புராணங்கள் கூறுகின்றன. எனவே, திருமணம் எவ்வளவு புனிதமானது, முக்கியமானது என புரிந்து கொள்ளலாம்.

இக்காலத்திலல் திருமணம் கூட தாமதமாக நடக்கிறது. ஆனால், திருமண முறிவு எனும் விவாகரத்து அதி விரைவாக நடந்து விடுகிறது. நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்குகள் குவிந்து கிடப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விரும்பத்தகாத விவாகரத்து ஏன்-யாரால் -எப்பொழுது ஏற்படுகின்றது என்று பார்த்து விடலாம்.

திருமணம் நடப்பதற்கு 7 ஆம் வீடு முக்கியம் என்பது அனைவருக்கும் தெரியும். இந்த 7 ஆம் வீடு இருக்கும் நிலையைப் பாருங்கள். இந்தப் பக்கம் ருண, ரோக, சத்ரு ஸ்தானமான 6ஆம் வீடு. அந்தப் பக்கம் அவமானத்துக் குரிய 8 ஆம் வீடு! ஐயோ பாவம்! இந்த 7 ஆம் வீடு எனும் களத்திர வீடு சண்டை வீட்டுக்கும் அவமான வீட்டுக்கும் இடையில் மாட்டிக் கொண்டு முழியாய் முழிக்கின்றது. அதனால்தான் திரும ணமான பலர் பேய் முழி முழித்து ஒரு சிலர் விழிபிதுங்கி, இயந்திரத்தில் அகப்பட்ட கரும்பு மாதிரி சக்கையாய் போய் விடுகிறார்கள் போலும.




7 ஆம் வீடு எனும் திருமண வீட்டின் அழகைப் பார்த்தோம். 7 இற்கு 12 ஆம் வீடு, 6 ஆம் வீடு. எந்தவொரு ஸ்தானத்திற்கும் அதன் 12 ஆம் வீடு விரயமாக்கும் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதான். எனவே, 6 ஆம் வீடும் ஆதன் அதிபதியும் 6 இன் சாரம் வாங்கிய கிரகங்களுமே ஒரு திருமணத்தை விரயமாக்க திருமண முறிவு காரணமாகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

7இல் இருக்கும் இராகுவோ கேதுவோகூட திருமண முறிவு ஏற்படுத்தக் கூடியவர்கள்தான். எனினும் திருமண வயதில் வரும் இராகு திசை இராகு புத்தியோ, கேது திசை கேது புத்தியோதான் இந்த விவாகரத்தைக் கொடுக்கும். குழந்தைப் பருவத்திலோ அல்லது 60 வயதிற்குப் பிறகோ இந்த தெசா புத்திகள் நடந்தால் வேறு மாதிரியான பிரச்சினைகளைத்தான் கொடுக்கும். எனவேதான் காலதேச வர்த்தமானம் என்பதை அனுசரித்துப் பலன் சொல்லவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இப்போது நாம் 6 ஆம் வீடு எம்மாதிரியான காரணத்துக்கு விவாகரத்தைக் கொடுக்கும் என்பதைப் பார்ப்போம்.

7ஆம் அதிபதியும் 6 ஆம் அதிபதியும் சேர்ந்திருந்தாலும் பார்வை பெற்றாலும் சார சம்பந்தம் பெற்றாலும் லக்னாதிபதி 6 ஆம் இட அதிபதி சாரம் வாங்கி அவர் 7 ஆம் இட அதிபதியுடன் சேர்க்கை பெற்றாலும் 7 ஆம் இட அதிபதியைவிட 6 ஆம் அதிபதி வலுவாக இருந்தாலும் இப்படி எவ்வகையிலேனும் 7,6 ஆம் இட சம்பந்தம் ஏற்படின் விவாகரத்து உண்டாகும்.

திருமண முறிவு எப்போது ஏற்படும்? 6 ஆம் இட சம்பந்தப்பட்ட புத்திகளில் அல்லது 6 ஆம் இட சாரம் பெற்ற கிரகங்களின் புத்திகளில் விவாகரத்து ஏற்படும்.7 ஆம் இட, 6 ஆம் இட சம்பந்தம் மேற்கண்ட வகையில் ஏற்பட்டால் திருமண முறிவு என்று பார்த்தோம். ஆனால் அதற்கும் ஒரு காரணம் இருக்கும் அல்லவா?

7,6 ஆம் இட சம்பந்தம் + லக்னம்

திருமண முறிவுக்கு ஜாதகரே காரணமாவார். இதிலும் சூரியன் சம்பந்தப்பட்டால் ஜாதகரின் ஈகோவே பொய் பேசும் தன்மையே முறிவுக்குக் காரணமாகிவிடும். சில நேரங்களில் குறைவான கல்வியும் ஒரு காரணமாகும்.



காரணமாகும். செவ்வாய் சம்பந்தம் இருப்பின்ஜாதகரின் அடங்கா கோபமே காரணமாகும். சனி இருப்பின் சோம்பேறித்தனமே காரணமாகும்.

7,6 ஆம் இட சம்பந்தம் + 2 ஆம் இடம்.

மணமுறிவுக்கு ஜாதகரின் குடும்பமே காரணமாகும். இவ்வமைப்பில் சுக்கிரன் சம்பந்தப்பட்டால் பணவிடயமாக முறிவு ஏற்படும். செவ்வாய் இருப்பின் வாழ்க்கைத்துணை மோசமாகத் திட்டுகிறார் என்பது காரணமாகும். இவ்வமைப்பில் சந்திரன் இராகு சேர்ந்தால் கேட்கவே வேண்டாம். பெரிய புத்திசாலிபோல நினைத்துக் கொண்டு கண்டபடி உளறிக் கொட்டி மண முறிவுக்கு காரணமாகி விடுவர். இராகு இருந்தால் ஜாதகருடைய

7,6 ஆமிட சம்பந்தம்+ 3 ஆமிடம்

இவ்வமைப்பு ஏற்பட்டு 3 இல் அலி கிரகங்களான சனி, புதன் சேர்க்கை அல்லது 3 ஆம் இடம் பலமற்று இருந்து, 3 ஆம் அதிபதி நீசம்,மறைவு பெற்று விளங்கினால் அது பெரும்பாலும் ஆண்மையின்மை காரணமாக மணமுறிவை ஏற்படுத்தும்.இவ்வமைப்பில் செவ்வாய் சேர மணமுறிவுக்கு இளைய சகோதரம் காரணமாவார். இவ்வமைப்பில் கேது சேர்ந்தால் எப்போதும் சந் தேகப்பட்டு அதுவே விவாகரத்துக்கு காரணமாகி விடும். பெரும்பாலும் பலமற்ற 3 ஆம் இட சேர்க்கை என்பது ஆண்கள் சம்பந்தமான பிரச்சின்னையே விவாகரத்கு காரணமாகும்.

7,6 ஆம் இட சம்பந்தம் + 4 ஆம் இடம்

இவ்வமைப்பு ஏற்படின் ஜாதகரின் தாயாரே விவாகரத்துக்கு முக்கிய காரணமாவார். இதில் சந்திரனும் சேர்ந்தால் கண்டிப்பாக ஜாதகரின் தாய்தான் விவாகரத்துக்கு முழுமுதல்காரணமாக இருப்பார். உச்ச சந்திரனாக இருப்பின் தாயாரின் அட்டகாசம், ஆளுமை அதிகரிப்பு காரணமாகும். சந்திரன் நீசமாகியிருந்தால் இல்லாதது பொல்லாததை சொல்லிச் சொல்லியே விவாகரத்து வாங்க வைத்திவிடுவார். சில நேரங்களில் மேற்கல்வி ஒரு காரணமாகிவிடும்.

**7, 6 ஆம் இட சம்பந்தம்+ 5 ஆம் இடம்.**

7 ஆம் இடம் திருமணம். 5 ஆம் இடம் காதல் சம்பந்தப்பட்டது. எனவே சிலருக்கு நல்ல வாழ்க்கைத்துணை, குழந்தைகள், குடும்பம் ஏற்பட்டு மகிழ்ச்சியாக ஒரு குறையும்இல்லாமல்தான் இருப்பார்கள். எனினும் திடீரென்று வேறு நபரிடம் ஈர்ப்பு உண்டாகி அது விபரீதமாகி அதுவே மணமுறிவுக்கு வழிவகுத்துவிடும். சில நேரங்களில் நீச குருவும் நீச 5ஆம் அதிபதியும் குழந்தை இன்மை என்னும் காரணத்தை ஏற்படுத்துவர்.

7 ,6 ஆம் இட சம்பந்தம் + 8 ஆம் இடம்

8ஆம் இடம் என்பது 7 ஆம் வீட்டிற்கு 2 ஆம் வீடு. எனவே, வாழ்க்கைத் துணையின் குடும்பத்தாரால் ஏற்படும் அவமானமே விவாகரத்துக்கு காரணமாகும். இவ்வமைமப்பில் இராகு சம்பந்தம பெறின். புகுந்த வீட்டினர் மறைத்து வைத்த விடயங்கள் பூதாகரமாகி திருமணம் முறிந்துவிடும். இந்த அமைப்பு. பெரும்பாலும் அவமானத்தை அடிப்படையாகக்கொண்ட மணமுறிவாக்வே அமையும்.

7,6 ஆம் இடம+ 9 ஆம் இடம்.

இந்தக் கூட்டமைப்பு ஏற்பட்டால் , மணமுறிவுக்கு ஜாதகரின் தந்தையே காரணமாவார். இதில் சூரியன்சம்பந்தப்படும் போது தந்தையின் தேவையற்ற வீராப்பு மண முறிவுக்கு காரணமாகும். இந்த அமைப்பில் குரு சேர்ந்தால் காரணம் வேறுபாடானதாக இருக் கும். திருமணம் என்பதே கணவன்-மனைவி மகிழ்ச்சியாக இருந்து குழந்தைகளைப் பெற்று நன்றாக வாழ்வதற்கான அமைப்புதான்.

(தொடரும்)

# தமிழர்களின் இருப்பு யாழில் ஒடுக்கப்பட்டு விடும்

## விரைவில் இது நடக்கும்- சுவாமிநாதன்

**யாழ்ப்பாணத்தில் இன்னும் 7 வருடங்களில் தமிழர்கள் வாழ்வதற்கு ஒரு இடம் இருக்குமா? என்பது பெரும் கேள்விக்குறியாக இருக்கின்றது என நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டிஎம். சுவாமிநாதன் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளார். யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அங்கு அவர்மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுவை எமது கட்சி தாக்கல் செய்தது முதல் இன்று வரை முதன்மை வேட்பாளர் துவாரகேஸ்வரன் உட்பட எமது கட்சி வேட்பாளர்களுக்கு அச்சுறுத்தல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

காரைநகரில் எமது கட்சியின் அலுவலகம் மீது இரண்டாவது முறையாகவும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் முதன்மை வேட்பாளருக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென தேர்தல்கள் திணைக்கள ஆணையாளரிடம்பலமுறை அறிவித்தும் இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சகல இடங்களிலும் இராணுவம் உள்ளது.

இராணுவத்தின் விற்பனை நிலையங்கள், ஹோட்டல்கள், இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிலுள்ள வீடுகள் என எங்கு பார்த்தாலும் இராணுவ மயமே.இப்படியான நிலையில் இன்னமும் 6,7 வருடங்களில் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் வாழ்வதற்கு ஒரு இடம் இருக்குமா? என்பது பெரும் கேள்வியாகவேயிருக்கின்றது.

அந்த மாதிரியான ஒரு நிலைமையை நாம் ஏன் கொண்டுவர வேண்டும். தமிழ்க் கட்சிகளுக்கு மக்கள் கொடுக்கும் வாக்கை நான் தடுக்கவில்லை. ஆனால், நான் கூற விரும்புவது என்னவெனில் கடந்த 40 வருடக்காலமாக தமிழ்மக்கள்தமது உரிமைகளையிழந்து, தங்களது வாழிடங்களையிழந்து, வாக்குரிமை மறுக்கப்பட்ட நிலைக்கு மக்களை கொண்டு வந்த இந்த அரசாங்கத்தை நாங்கள் மீண்டும் கொண்டு வந்து அரசியலில் நிறுத்தினால் தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்கு பெரும் தாக்கம் ஏற்படும்.

மேலும் தமிழ் மக்களில் 40 வீதமானோர் மட்டும் வாக்களிப்பதனால் மட்டும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி விட முடியாது. எனவே, அனைத்து தமிழ் மக்களும் எதிர்வரும் 21 ஆம் திகதி தமது வாக்கினையளித்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை என அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது ஐ.தே.கவின் சார்பில் வடக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் அக்கட்சியின் முதன்மை வேட்பாளரான தியாகராஜா துவாரகேஸ்வனும் பங்கு கொண்டிருந்தார். (செ-6)

## அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தவறவிடப்பட்ட மூன்று தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு யாழ்.போதனா வைத்திய சாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேற்படி இடைக்குறிச்சி வரணியை சேர்ந்த முருகர் கதிர்காமர் என்பவருடைய 370361592V என்ற இலக்கத்தை உடைய்தும் திருகோணமலை மணிவாசகர் வீதியை சேர்ந்த இராமநாதன் துளசிநாதன் என்பவருடைய 671431413V என்ற இலக்கத்தையுடைய தும் நெடுந்தீவு 10 ஆம் வட்டாரத்தை சேர்ந்த சவிரிமுத்து தேவதாஸ் என்பவருடைய 582522545V என்ற இலக்கத்தையுடையதுமான 3 தேசிய அடையாள அட்டைகளே யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

எனவே, உரியவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை காரியாலயத்திற்கு வருகை தந்து தமது தேசிய அடையாள அட்டைகளை பெற்றுச் செல்லுமாறு வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார். (அ-5)

# ஆயுத கலாசாரத்தை ஊக்குவிக்க அரச தரப்பினர் சதி முயற்சி!

## சுரேஸ் எம்.பி.குற்றச்சாட்டு

**(யாழ்ப்பாணம்)**

**இலங்கைக்குள் தனி நாட்டையும் ஆயுத கலாசாரத்தையும் ஊக்குவிப்பவர்களாக அரசாங்கமும் அதன் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் விரவன்ச போன்றவர்களும் செயற்படுகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.**

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியாலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்குள் தனிநாடு ஒன்றை ஊக்குவிப்பவர்களாக இருக்கக்கூடியவர்கள் யார் எனில், அரசாங்கமும் அதன் அமைச்சர்களான விமல் வீரவன்ச, பாட்டலி சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் இருக்கின்றனரே தவிர தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ, அதன் பாராளுமன்ற உறுப் பினர்களோ அல்லர் . நாம் மீண்டும் கூறுகின்றோம் ள யான அதிகாரப் பகிர்வு தேவை.

மேலும் அரசாங்கத்தின் ஊடகங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக பொய்யான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாம் கூறாத விடையங்களைத் திரிவுபடுத்தி செய்திகளை வெளியிட்டு அவற்றை தமக்கு சாதகமாக பிரசாரம் செய்து வருகின்றனர்.

ஆயுதப் போராட்டத்தை நாம் ஊக்குவிப்பதாவும் தாம் சரியான பாதையில் செல்வதாகவும் மக்கள் மத்தியில் கதை பரப்ப முற்படுகின்றனர்.

ஆனால், உண்மையில் ஒரு தனிநாட்டுக்கான போராட்டத்தை உருவாக்குவதானால், அது விமல் வீரவன்ச உள்ளிட்ட அரச தரப்பினரின் சதியே தவிர தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அல்ல என்பதை உறுதியாக கூறிக் கொள்கின்றேன்.

மேலும் இலங்கையில் எதிர்காலத்தில் இன்னுமொரு ஆயுதக் கலாசாரம் உருவாகுமானால் அதற்கு அடிப்படைக் காரணம் இலங்கை அரசாங்கமே என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# பேருந்து கட்டணங்களை அதிகரித்தால் வழித்தட அனுமதி இரத்தாக்கப்படும்

(கொழும்பு)

அரசாங்கத்தின் அங்கீகாரமின்றி பேருந்து கட்டணங்களை அதிகரிக்கும் தனியார் பேருந்து சேவை வழங்குநர்களின் வழித்தட அனுமதியை இரத்துச் செய்யுமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் தொடர்புடைய ஏனைய அதிகாரிகளுக்கும் சட்டமா அதிபர் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பேருந்து கட்டணங்கள் அண்மைக்காலத்தில் அதிகரிக்கப்படமாட்டாது. ஆனால், பேருந்து கட்டண கொள்கை பற்றி, இந்த பிரச்சினையை ஆராய வேண்டி நியமிக்கப்பட்ட அமைச்சரவை உப-குழு தீர்மானிக்கவுள்ளது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் றொஷான் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பேருந்து கட்டண அதிகரிப்பு பிரச்சினையை ஜனாதிபதி தனது பொறுப்பில் எடுத்துள்ளார்.

. எனவே, குறித்த பிரச்சினை நிரந்தரமாக தீர்க்கப்படுமென நாம் நம்புகின்றோம் என்றும் அவர் கூறினார்.

தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன, எதேச்சதிகாரமாக பேருந்து கட்டணங்களை உயர்த்தப் போவதாக கூறியதற்கு கருத்து தெரிவித்த குணவர்த்தன, போக்குவரத்து அதிகார நிறுவனங்களுக்கு சவால் விடுக்கும் உரிமை எந்த தரப்பினருக்கும் இல்லை என்றார். (அ-2)

# விற்பனை விருது வழங்கும் நிகழ்வு

(பருத்தித்துறை)

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் 51 ஆவது ஆண்டு நிறைவில் வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை சிறிமாவோ பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்றது.



இவ்விருது வழங்கும் நிகழ்வில் 2012 ஆம் ஆண்டிற்குரிய சிறந்த விற்பனை நட்சத்திர விருதினை நெல்லியடி கிளையின் உத்தியோகத்தர் மகாதேவன் -சுமன் பெற்றுக் கொண்டுள்ளார்.

கடந்த வருடமும் 2011 ஆம் ஆண்டுக்கான விருதையும் இவர் பெற்றுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் இவ் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்றது. (அ-10)

# அரசாங்கத்தை சீர்குலைக்க ஒருபோதும் இடமளியேன்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அதிகாரத்தையும் சீர்குலைப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்தார்.

மாத்தளையில் இடம்பெற்ற தேர்தல் பிரசார கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

அரசின் பங்காளி என்றவகையில் அந்த பொறுப்பிலிருந்து தான் விலகப்போவதில்லை என்றும் அவ்வாறான முயற்சியை யாராவது எடுப்பார்களாயின் உரிய நேரத்தில் அவர்களுக்கு பாடம் கற்பிப்பதற்கு தன்னுடைய கட்சிக்கு முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசிற்கும் எங்களுடைய கட்சிக்கும் இடையிலான உறவைப் புரிந்து கொள்ளாத சில அமைச்சர்கள் தம்முடைய கட்சியை அரசாங்கத்திலிருந்து தூக்கி வீசுவதற்கு முயற்சித்தாலும் அந்த முயற்சி ஒருபோதும் பலிக்காது என்றும் அது நரி தன் வாலினால் கடலை வற்றச் செய்யும் முயற்சியாகுமெனவும் தங்களுடைய அரச தலைவர் மஹிந்த ராஜபக்ஷவையும் அரசாங்கத்தையும் பாதுகாப்பது தங்களுடைய பொறுப்பாகும் என்றும் கூறினார். (அ-2)

# நாமடைந்த வெற்றியை ஐ.நா. திசைதிருப்ப முனைகின்றது

## அமைச்சர் விமல் கொதிப்பு

(கொழும்பு)

கடந்த முப்பது வருடகாலம் எம்மைப் பீடித்திருந்த கொடிய யுத்தத்தை உயிர்த்தியாகம் செய்தே நாம் முடிவுக்கு கொண்டுவந்தோம். ஜனாதிபதியின் திறமையான வழி நடத்தல் காரணமாக நாம் அடைந்த வெற்றி தொடர்பில் சர்வதேசம் திருப்தி அடையவில்லை. அவர்களால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

எனவே, ஐ.நா.சபை என்ற போர்வையில் நவநீதம்பிள்ளையூடாக சர்வதேசம் அதனைத் திசைதிருப்ப முயற்சிக்கிறது. இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கண்டி பூஜாப்பிட்டியவில் இடம் பெற்ற தேர்தல் பிசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தனது உரையில் அவர் மேலும் கூறியதாவது,

நந்திக்கடல் பகுதியில் பிரபாகரன் உட்பட புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்ட இடத்திற்குச் சென்று மலர்வளையம் வைக்க நவநீதம்பிள்ளை முயற்சி செய்ததில் இருந்து அவரது சுயரூபம் தெரிகிறதல்லவா? 2015 அல்லது 2016 இல் இடம் பெற்றபொதுத் தேர்தலில் பலவீனமான ஒரு ஆட்சியை ஏற்படுத்தி அதன் ஊடாக மீண்டும் நாட்டைத் துண்டாட சர்வதேசம் திட்டமிட்டுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை பணயக் கைதியாக்கி யுத்தத்தால் அடையமுடியாது போன ஒன்றை அடைய முயற்சிக்கிறது.

லண்டனில் முஸ்லிம் பள்ளி ஒன்று தாக்கப்பட்டு வெள்ளையர்களால் அழிக்கப்பட்டது. நவநீதம்பிள்ளை அங்கல்லவா சென்றிருக்க வேண்டும். ஏன் அவர் இங்கு வாந்தார்? அப்படியான நாடுகளுக்கு அவர் ஏன் செல்வதில்லை? நடைபெறப்போகும் மாகாண சபைத் தேர்தல், பொதுத் தேர்தல் அல்லாத போதும் அது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள ஒன்றாகும்.

இதன் மூலம் சர்வதேசத்திற்கு நாம் நல்ல பதிலைக் கொடுக்க வேண்டும். நாட்டில் அமைதி சீர்குலைந்து விட்டால் அபிவிருத்தி பாதிப்படையும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# தற்காலிக துறவறத்தை துறந்தார் நடிகர் சனத்

பிரபல சிங்கள திரைப்பட நடிகரான சனத் குணதிலக்க ஒருவாரம் தற்காலிக துறவறம் பூண்டிருந்த நிலையில், சமய சம்பிரதாயங்களுடன் துறவறத்தில் இருந்து சாதாரண வாழ்க்கைக்கு திரும்பியதாக கீனியாவல பாலித தேரர் தெரிவித்துள்ளார்.

சனத் குணதிலக்க துறவறம் பூண்டிருந்த காலத்தில் ஆகம விதிப்படி வாழ்ந்ததாகவும் அவர் காவிக்கு அவமதிப்பை ஏற்படுத்தவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். தற்காலிகமாக துறவறம் பூண்ட சனத் குணதிலக்கவிற்கு ஹங்குராங்கெத்தே விமலரத்ன என்ற துறவு பெயர் சூட்டப்பட்டது.

இப்படியான சம்பவங்கள் வெளிநாடுகளில் நடைபெறுவதாகவும் சிலர் இந்த செயற்பாட்டை விமர்சிப்பது அநீதியானது எனவும் பாலித தேரர் குறிப்பிட்டுள்ளார். திரைப்படம் ஒன்றின் கதாபத்திரத்திற்காக தாம் தற்காலிகமாக துறவறம் பூண்டதாக நடிகர் சனத் குணதிலக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# அதிரடிப்படை உறுப்பினர்களுக்கு விளக்கமறியல் மீண்டும் நீடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு ஐந்து மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள பொலிஸ் விசேட அதிரடிப்படை உறுப்பினர்கள் 12 பேரையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் நேற்றுமுன்தினம் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் நீதவான் ஏ.எல். அஸ்ஹர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# 151 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட போதைப்பொருள் மீட்பு

(கொழும்பு)

கிறீஸ் ரின்களில் அடைக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 250 கிலோகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருட்கள் மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட நான்கு சந்தேகநபர்களும் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் புத்திக்க சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் நீதிமன்றம் ஊடாக அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் கிறீஸ், குளியலறை சாதனங்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை இறக்குமதி செய்யும் போர்வையில் கொள்கலனொன்றில் இந்த போதைப் பொருள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன எனவும் அவர் தெரிவித்தார்.

இவை 151 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பெறுமதியுடையவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக சுங்க வருமான மேற்பார்வை பிரிவு அறிவித்துள்ளது. (அ-2)

# பொதுக்கூட்டம்

முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி பழைய மாணவர் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பழைய மாணவர்களை தவறாது இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## எலுமிச்சை

**Botanical Name:- Citrus aurantifolia**
**Family:-Rutaceae**
**Engl- Acid Lime**
**Sing- Dehi**

முட்கொண்ட புதர்செடி அல்லது சிறிய ...ந்த மரம். இலைகள் தடித்தவை. காம்பு இறகு கொண்டது. மடல் முட்டை வடிவானது. நுனி கூரானது அல்லது மொட்டையானது. மலர்கள் சிறியவை. வெள்ளை அல்லது றோஸ் நிறம் கொண்டவை. 510 மலர்கள். ரெசிம் வகை மஞ்சரியில் அமைந்தவை. கனிகள் கோள வடிவானவை. அல்லது முட்டை வடிவானவை. கனியின் மேலுறை மெல்லியது. நெருக்கமாக ஒட்டியது. கனிந்த நிலையில் மஞ்சள் வண்ணமும் நறுமணமும் கொண்டது. விதைகள் முட்டை வடிவானவை. சித்திரை, வைகாசி மாதங்களில் பூ பூக்கும்.

**இனவிருத்தியும் பரம்பலும்**

பெரும்பாலும் விதை மூலமாக இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. மொட்டு ஒட்டு மூலமும் இனப்பெருக்கம் செய்யலாம். ஓராண்டு வயதுடைய கன்றுகள் நடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. 2-3 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும். எலுமிச்சை 25 ஆண்டுகள் வரை நல்ல பலனைத் தரும். எல்லா வகை மண்ணிலும் பயிரிடலாம். சிறு கன்றுகளை 6 மீற்றருக்கு ஒன்றாக நடவும்.

**100 கிராம் எலுமிச்சம் பழத்திலுள்ள சத்துக்கள்**

புரதம் -1.5 கிராம்
கொழுப்பு - 1.0 கிராம்
நார்ப்பொருள் - 1.3 கிராம்
காபோவைதரேற்று- 10.9 கிராம்
கல்சியம்- 90 மில்லி கிராம்
பொஸ்பரஸ் - 20 மில்லிகிராம்
இரும்பு-0.3 மில்லிகிராம்
விற்றமின் C- 63 மில்லிகிராம்
கரோட்டின்- 15 மைக்ரோகிராம்.

**மருத்துவப் பயன்கள்**

✦ உலர்ந்த எலுமிச்சம் பழத்தோலை சீயாக்காய், உலர்ந்த கறிவேப்பிலை, வெந்தயம், பச்சைப்பயறு ஆகியவற்றுடன் கலந்து அரைத்து தலையில் நன்கு தேய்த்து குளித்து வர பொடுகு நீங்குவதுடன் தலைமயிர் வளருவதற்கும் கருமையாவதற்கும் உத... உடலில் தேய்த்துக் குளிக்க மேனி அழகு பெறும்.


✦ எலுமிச்சைச்சாறுடன் தேனையும் சமமாகக் கலந்து ஒரு அவுன்ஸ் அளவு சாப்பிட்டு வர மண்ணீரலை பலப்படுத்தி மலேரியா சுரத்தையும் தணிக்கும்.

✦ அவ்வப்போது எலுமிச்சை சாற்றை உடலுக்குத் தேய்த்துக் குளித்து வந்தால் நமைச்சல், அரிப்பு, சொறி, சிரங்கு, கரப்பான் முதலிய தோல் வியாதிகள் நீங்கும்.

✦ எலுமிச்சம் சாற்றை குடித்து வந்தால் இரத்தக் குழாய்களில் உறைந்திருக்கும் கழிவுப் பொருட்களை அகற்றி இரத்தத்தை தூய்மைப்படுத்தும்.

✦ எலுமிச்சம் சாற்றில் சிட்ரிக்கமிலம் இருப்பதனால் வெறும் சாற்றை சாப்பிடுவதைவிட வெந்நீரிலோ, தேனிலோ அல்லது வேறு ஏதேனும் பழச்சாற்றுடனே கலந்து சாப்பிடுவதே நலம்.

✦ கர்ப்பம் தரித்து நான்காவது மாதத்திலேயே காலையும் மாலையும் எலுமிச்சம் சாற்றை தண்ணீரில் கலந்து அதில் ஒரு கரண்டி தேனையும் கலந்து சாப்பிட்டு வந்தால் பிரசவம் இலகுவாகும்.



✦ தோலின் மீது எந்த நோய் ஏற்பட்டிருந்தாலும் எலுமிச்சை ரசத்தில் மஞ்சள், கடுகு இவைகளைப் பொடி செய்து போட்டு நன்றாக குழைத்து மேலே பற்றுப் போடலாம்.

✦ உள்ளியை நன்றாக அரைத்து அத்துடன் எலுமிச்சை சாற்றையும் கலந்து தலைக்குத் தேய்த்துக் குளித்து வந்தால் தலையிலுள்ள பேன்கள் அழியும்.

✦ எலுமிச்சம் பழச்சாற்றை உப்பைக் கலந்து தேள் கொட்டிய இடத்தில் பூசினால் கடுகடுப்பு நீங்கும்.

✦ எலுமிச்சையை வெட்டி அதில் இந்துபபு, சுக்கு இவைகளைப் பொடி செய்து தூவி அப்படியே வாயில் போட்டு சுவைத்தால் மலச்சிக்கல் நீங்கும்.

✦ எலுமிச்சம் பழரசத்தில் ஓரிரவு சீரகத்தை ஊறவைத்து வெயிலில நன்கு உலர்த்தி பொடித்து வைத்துக் கொள்ளவும். இதனை வேண்டும் போது சிறிது எடுத்து மென்று சாப்பிட்டு வெந்நீர் அருந்த குமட்டல், பசியின்மை, பித்தவாந்தி, பித்தமயக்கம் தீரும்.

✦ குளிர்ந்த நீரில் எலுமிச்சம் பழச்சாற்றை கலந்து சிறிதளவு தேன் சேர்த்து நாள்தோறும் அருந்தி வர உடற்பருமன் குறையும்.

✦ எலுமிச்சம் பழச்சாறு ரசம் 300 மில்லி, 50 கிராம் இந்துப்பு, 150 கிராம் சீரகத் தூள் ஆகியவற்றை நன்கு கலக்கித் தினம் காலை, மாலை என 20தொடக்கம் 30 தினங்கள் 1 தொடக்கம் 2 கிராம் அளவு அருந்திவர வயிற்றுக் கோளாறு , பித்தத்தினால் உண்டாகும் வெப்பம் நிற்கும்.

✦ வெள்ளைக் கரிசலாங்கண்ணி இலைச் சாறு 100 மில்லி ,எலுமிச்சம் பழச்சாறு 100 மில்லி, பசுவின்பால் 100 மில்லி ,நல்லெண்ணெய் 300 மில்லி எடுத்து சட்டியிலிட்டு சுண்டக்காய்ச்சி தலைக்குத் தினம் தடவி வர முடி நன்கு கறுத்து, நீளும், முடி நரைக்காது.

✦ எலுமிச்சம் பழச்சாற்றில் சிறிது உப்பும் தண்ணீரும் கலந்து உண்ண காய்ச்சலின் போது ஏற்படும் தொண்டை வறண்டு போதல் நீங்கி, சிறுநீர் நன்கு வெளிப்படும்.

✦ எலுமிச்சம் பழச்சாற்றுடன் மோர் கலந்து கொடுக்க கோடை காலத்தில் ஏற்படும் உடல் உஷ்ணம் தணிந்து உடல் குளிர்ச்சியாக இருக்கும்.

✦ விதை முற்றாத எலுமிச்சம் பிஞ்சை ஊறுகாய் போட்டு தினமும் உணவோடு சேர்த்து உட்கொண்டு வந்தால் மலக்கட்டு நீங்கி, பித்தம் தணிந்து, இரத்த மூலம் தணியும்.

✦ எலுமிச்சம் பழத்தை துண்டுகளாக்கி துணியில் பொட்டலமாகக் கட்டிக் காய்ச்சிய நல்லெண்ணெயில் தொட்டு ஒத்தடம் கொடுக்க என்புகளின் இணைப்புகளில் உண்டாகும் வலி போகும்.

✦ எலுமிச்சை தளிர் இலைகளை நன்கு மைபோல அரைத்து வெண்ணெயில் கலந்து ஓர் இரவு வைத்திருந்து நெய்யாக்கி சேமித்து வைத்துக் கொண்டு வாதம், சுளுக்கு, வீக்கம் ஆகியவற்றுக்கு தடவ நல்ல பலன் தெரியும்.

✦ இளம் தளிர்களை உலர்த்தி மஞ்சள் பொடியுடன் கலந்து பொடித்து முகத்தில் தேய்த்து வைத்திருந்து குளிக்க சிறுபருக்கள் குணமாவதுடன் முகம் ஒளியும் அழகும் பெறும்.

✦ எலுமிச்சம் பழரசத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றை சமனிடை சேர்த்து சிறிதளவு சீனி சேர்த்து ஒரு மண்பானையில் போட்டு மேல் மூடி இறுக்கிக் கட்டி பூமியில் 40 நாட்கள் புதைத்து வைத்து பின் எடுத்து வடித்து வைத்துக் கொண்டு அன்றாடம் சாப்பிட்டு வந்தால் நரம்புத் தளர்ச்சி, கை , கால் உளைச்சல், பசியின்மை, அஜீரணம் தீரும்.

✦ எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து விட்டு அதன் தோலின் உள்புறம் வெளியே வருமபடி செய்து, முழங்கை, பின் கழுத்து போன்ற



இடங்களில் நன்றாகத் தேய்த்துவந்தால் கறுப்பு நிறம் மறையும்.

✦ எலுமிச்சம் பழத்தோலை வெயிலில் காய வைத்துப் பொடி செய்து பல் தேய்த்துவந்தால் பற்கள் பளிச்சென இருக்கும்.

✦ எலுமிச்சம் பழச்சாறுடன் கடலை மாவு கலந்து வாரம் இருமுறை முகத்தில் பூசிவந்தால் முகம் பளபளப்பாக இருக்கும்.

✦ எலுமிச்சம் பழச்சாறை தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் தலை மற்றும் தலைமுடியில் உள்ள எண்ணெய் பிசுக்கு நீங்கும்.

✦ எலுமிச்சம் பழச்சாறை தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் கண் பிரச்சினைகள் தீரும்.

✦ எலுமிச்சம் பழச்சாறு, வெள்ளரிப்பிஞ்சு, உப்பு மூன்றையும் சாப்பிட்டால் அஜீரணக் கோளாறுகள் நீங்கும்.

✦ எலுமிச்சம் பழச் சாற்றில் தேயிலைத் தண்ணீரைக் கலந்து தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் தலைமுடி கருமையாக வளரும்.

✦ எலுமிச்சம் பழச்சாறில் தேன் கலந்து முகத்தில் பூசிவந்தால் தோல் சுருக்கம் மறையும்

✦ எலுமிச்சம் பழச்சாறு, வல்லாரைக் கீரை இரண்டையும் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள வெண்புள்ளிகள் மறையும்.

✦ எலுமிச்சம் இலையை கஷாயம் வைத்து அடிக்கடி குடித்து வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

✦ எலுமிச்சம் பழச்சாற்றை தேநீரில் கலந்து குடித்தால் தலைவலி நீங்கும்.

✦ தேங்காய் எண்ணெயில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து காய்ச்சி தலையில் தேய்த்துக் குளித்து வந்தால் பொடுகுத் தொல்லை தீரும்.

✦ எலுமிச்சம் பழச்சாறை கடுகு எண்ணெயில் கலந்து காய்ச்சி தலைக்குக் குளித்தால் பொடுகு, பேன் நீங்கும்.

✦ எலுமிச்சம் பழச்சாறை முகம் மற்றும் உடல் முழுவதும் தடவிக் கொண்டால் தோலின் கறுமை நிறம் மாறும்.

✦ எலுமிச்சம் பழச்சாற்றில் தேன் கலந்து உதடுகளில் பூசிவந்தால் புதுப்பொலிவு கிடைக்கும்.

✦ எலுமிச்சம் பழச் சாற்றில் இலவங்கப் பொடியைக் கலந்து முகத்தில் பூசி வந்தால் கரும்புள்ளிகள் மறையும்.

✦ எலுமிச்சம் பழச்சாறு, தக்காளிச்சாறு இரண்டையும் ஒன்றாகக் கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் ஊற வைத்துக் கழுவினால் முகப்பொலிவு கூடும்.

✦ எலுமிச்சம் பழச்சாறு, பாதாம் பருப்பு, தயிர் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து அரைத்துமுகத்தில் தடவி வந்தால் கரும்புள்ளிகள், பருக்கள் மறையும்.

✦ எலுமிச்சம் பழச்சாறில் கோதுமை மாவைக் குழைத்து கட்டிகள், வியர்க்குரு போன்றவற்றின் மீது தடவினால் அவை விரைவில் மறையும்.

✦ எலுமிச்சம் பழச்சாற்றில் உப்பு சேர்த்துக குடித்தால் வாந்தி உடனடியாக கட்டுப்படும்.

✦ எலுமிச்சம் பழச்சாறு, பேரீச்சம்பழம், சீரகம் சேர்த்து அரைத்து வெறும் வயிற்றில் சாபபிட்டு வர இரத்தக் கொதிப்பு குணமாகும்.

✦ எலுமிச்சம் பழச்சாறு வெங்காயச் சாறு இரண்டையும் ஒன்றாகக் கலந்து குடித்து வந்தால் பித்தம், தலை கிறுகிறுப்பு குணமாகும்.

✦ இளநீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து உடலில் தேய்த்து வந்தால் தேமல், வியர்குரு போன்றவை குணமாகும்.

✦ எலுமிச்சம் பழசச்சாறு பிழிந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் மலச்சிக்கல் குணமாகும்.

✦ எலுமிச்சம் பழத்தோலை அரைத்து நெற்றியில் பற்றுப் போட்டால் தலைவலி குணமாகும்.

✦ எலுமிச்சம் பழச்சாற்றில் மா மர பிசினைக் குழைத்து காலில் ஏற்படும் பித்த வெடிப்புக்கள் மீது தடவினால் விரைவில் குணம் கிடைக்கும்.

✦ எலுமிச்சம் பழச்சாறை ஈர உளுத்தம் மாவில் கலந்து சேற்றுப்புண்களில் தடவினால் அவை விரைவில் குணமாகும்.

✦ எலுமிச்சம் பழச்சாறு குடித்து வந்தால் மாதவிலக்குச் சமயங்களில் ஏற்படும் வயிற்று வலி மறையும்.


✦ எலுமிச்சம் பழச்சாறு எடுத்து காதில் இரண்டு துளிகள் விடின் காது குடைச்சல் குணமாகும்.

✦ குளிர்ந்த நீரில் (200 மில்லி) ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து அப்ப சோடாவை (10 கிராம்) கலந்து குடித்தால் வயிற்று வலி உடனே நிற்கும்.

✦ எலுமிச்சம் பழச்சாறில் தண்ணீர் கலந்து வாய் கொப்பளித்தால் வாய் நாற்றம் போகும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

# செயற்கை இறைச்சி சுற்றுச்சூழலை காப்பாற்றுமா?



நெதர்லாந்தைச் சேர்ந்த ஆய்வாளர் டாக்டர் *மார்க் போஸ்ட்* உருவாக்கிய இந்த செயற்கை மாட்டிறைச்சி, பசுவின் ஸ்டெம் செல்லை கொண்டு ஆய்வகத்தில் வளர்க்கப்பட்டதாகும். இது உணவுப் பற்றாக் குறையை தீர்க்குமா?

ஆகஸ்ட் 5 ஆம் திகதி இலண்டன் மாநகரத்தின் செய்தியாளர் கூட்டத்தில் செயற்கையான மாட்டிறைச்சியால் செய்யப்பட்ட பர்கர் (Burger) முதல் முறையாக பரிமாறப்பட்டது. நெதர்லாந்தை சேர்ந்த ஆய்வாளர் டாக்டர் மார்க் போஸ்ட் உருவாக்கிய இந்த செயற்கை மாட்டிறைச்சி, பசுவின் ஸ்டெம் செல்லை கொண்டு ஆய்வகத்தில் வளர்க்கப்பட்டதாகும். இனி இறைச்சிக்காக விலங்குகளை கொல்ல வேண்டியதில்லை, ஆய்வகத்தில் தனியான இறைச்சி தசையை மட்டும் வளர்க்க முடியுமாம்.

ஒரு உயிரினத்தின் உடலில் எலும்பு, இரத்தம், திசு, தசை, மூளை, இதயம் என பல்வேறு செல்வகைகள் உள்ளன. ஸ்டெம் செல்கள் என்பவை, எந்த செல் வகையாகவும் மாறும் திறனுள்ள மாஸ்டர் செல்லாகும். உதாரணமாக மனித உடலில் 200 க்கும் மேற்பட்ட செல்வகைகள் உள்ளன. தாயின் கருப்பைக்குள் பெண்ணின் கரு முட்டையும் ஆணின் உயிரணுவும் ஒன்றிணைந்து முதலில் ஒரேயொரு செல் தான் உருவாகிறது. அவ்வொரு செல்லே பல்கிப் பெருகி முளைக்கருவாகி பின்னர் வெவ்வேறு வகை செல்களாக மாற்றமடைகிறது. முளைக்கருவிலுள்ள செல்களே ஸ்டெம் செல்கள் எனப்படுகின்றன.

ஸ்டெம் செல்களை கொண்டு செயற்கையாக உடலுறுப்புகளை உருவாக்குவதன் மூலம் தீர்க்க முடியாத பல நோய்களையும், குறைபாடுகளையும் சரிசெய்ய முடியுமென்று மருத்துவ உலகில் பல ஆய்வுகள் நடந்துவருகின்றன. இவற்றின் உதவியால் செயற்கையாக செய்யப்படும் வெளி,உள் உறுப்புகளும் மருத்துவ விஞ்ஞானத்தில் பெரும் புரட்சியை ஏற்படுத்துவது சாத்தியமாகலாம். உதாரணமாக, செயற்கை கருவிழி அல்லது சிறுநீரகங்களை உருவாக்கும் ஆராய்ச்சி வெற்றி அடைந்துவிட்டால், கருவிழி பொருத்துவதன் மூலம் கண்பார்வை பெறும் நிலையில் இருப்பவர்களுக்கும் சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மகத்தான உதவியாக இருக்கும். அதேவேளை இந்தப் புரட்சி, ஏழை மக்களுக்கு பலனளிப்பது என்பது சாத்தியமே இல்லாத ஒன்று.

மேலும், இத்தகைய ஆராய்ச்சிக்கு பல கட்ட மருத்துவ சோதனைகள், கடும் முயற்சிகள் தேவைப்படும், அந்த- சில பத்தாண்டுவரை காத்திருக்கவேண்டிய நிச்சமற்ற வெற்றியை நோக்கிய ஆராய்சிக்கு நிதி ஆதரவை வணிக நிறுவனங்கள் வழங்க முடியாது. மேலும் பல ஆராய்ச்சிகளுக்கான சந்தை தேவை பெருமளவு இல்லாமல் போகலாம். உதாரணமாக அரிதாக, சிறு எண்ணிக்கையிலானவர்களுக்கே வரும் நோய்களுக்கான ஆராய்ச்சிக்கு ஆகும் உடனடிச் செலவில், மிகச் சிறிதளவே வரும் மொத்த வருமானம் மூலம் திரும்பப் பெறமுடியலாம்.

எனவே மருத்துவம் என்பது வணிகமல்ல, மக்களுக்கான சேவை எனும் பார்வை கொண்ட பொதுத்துறை அல்லது அரசு ஆதரவில்தான் இத்தகைய ஆராய்ச்சிகள் நடக்க முடியும். நீண்ட கால அறிவியல் வளர்ச்சி, மனித குல மேம்பாடு என்ற நோக்கத்தில் இத்தகைய ஆராய்ச்சிகளை நடத்த வேண்டியிருந்தாலும் இன்றைய முதலாளித்துவ உலகில் இது கடினமான ஒன்றே.

இந்தச் சூழலில்தான் ஒரு பசுவின் முளைக்கருவில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஸ்டெம் செல் தசை (திசு) செல்லாக மாற்றப்பட்டு பின்னர் பசுவின் இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட சீரத்தில் (உயிர்க் கரைசல்) இட்டு ஊட்டச்சத்து மற்றும் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வேதிப் பொருட்களின் துணையுடன் இறைச்சியாக வளர்க்கப்பட்டுள்ளது. சுமார் எட்டு வாரங்கள் வரை இச்செயல் முறையில் வளர்க்கப்பட்ட இந்த இறைச்சியில் கொழுப்பு அறவே இல்லை என்கிறார்கள்.



நிகழ்வின் பின்னர், பத்திரிகையாளர்களிடம் பேட்டியளித்த மார்க் போஸ்ட், உலகின் அதிகரித்துவரும் உணவுத் தேவையை ஈடுசெய்யவும் அதிகரித்து வரும் சுற்றுச் சூழல் மாசடைதலை குறைப்பதற்காகவும் இந்த ஆய்வில் தாம் ஈடுபட்டதாக தெரிவித்தார்.

மாடுகள் சுமார் 100 முதல் 150 கிராம் வரை தாவரப்புரதத்தை உண்டு 15 கிராம் புரதத்தை தமது உடலில் உருவாக்குகின்றன. அதாவது மாடுகளுக்கு உணவளிப்பதில் 15% மட்டுமே மனிதர்களுக்கு திரும்ப கிடைக்கிறது என்றும் இந்த வகையில் நாம் 85% உணவை இழக்கிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் 2050 ஆம் ஆண்டில் உலகின் இறைச்சி தேவை தற்போதைய தேவையை விட 70%க்கும் மேல் அதிகமாக இருக்குமென்று ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய நிறுவனத்தின் மதிப்பீடு தெரிவிக்கிறது என்றும், இப்போதே உலகின் 70% க்கும் மேற்பட்ட விளைநிலம் கால்நடை தீவன நிலமாக இருப்பதையும் உலகின் பசுமைக்குடில் வாயுக்களில் 5% கரியமில வாயுவையும், 40% மெதேன் வாயுவையும் கால்நடைகள் வெளியேற்றுவதன் மூலம் புவி வெப்படைவதற்கு காரணமாக இருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

**செயற்கை இறைச்சி பர்க்கருடன் விஞ்ஞானி மார்க்போஸ்ட்**

கோட்பாட்டளவில் ஒரேயொரு ஸ்டெம் செல்லிலிருந்து 20 ஆயிரம் தொன் வரை செயற்கை இறைச்சி உற்பத்தி செய்யமுடியுமாம். செயற்கை இறைச்சியை பெருமளவில் உற்பத்தி செய்வதன் மூலம் மெதேன் வெளியேற்றத்தை 95%, கால்நடைத் தீனி நிலத்தை 98%, குறைக்க முடியுமென்றும், அதன் மூலம் உலகின் உணவுப் பற்றாக் குறையை ஈடுகட்ட முடியுமென்றும் 2011 ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் போர்ட்டு பல்கலைக் கழகம் வெளியிட்ட ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

காலையில் அரைத்த தேங்காய் சட்டினி கெட்டுப்போகாமல் இருக்கும் நுட்பத்தையோ, அதிகமாக விளைந்த தக்காளி அழுகி நாசமாகாமல் போகும் நுட்பத்தையோ கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் போராடிக்கொண்டிருக்கும் சூழலில் செயற்கை இறைச்சியில் பக்கர் தயாரிக்கும் அராய்ச்சி தலைப்புச் செய்திகளை பிடித்திருப்பதற்கு காரணம் என்னவாக இருக்கும்?

இந்த செயற்கை இறைச்சி ஆய்வுத் திட்டத்தின் மொத்த செலவான 250 ஆயிரம் யூரோக்களை கூகிள் இணை நிறுவனர் செர்கே பிரின் நிதியளித்துள்ளார். இந்நிகழ்வு ஸ்டெம் செல் ஆய்வுகளுக்கு நிதியளிக்க முதலீட்டாளர்களை ஈர்க்குமென்பதாலும், இதன் முலம் செயற்கையாக மனித/விலங்கு உறுப்புகளை வளர்க்க முடியுமென்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாலும் அறிவியலில் இது முக்கியமானதொரு நிகழ்வென்று அவர்கள் கருதுகின்றார்கள்.

அடிப்படை அறிவியல் ஆய்வுகளுக்கு நிதியளிப்பதை பெரும்பாலான அரசுகள் குறைத்துக்கொண்ட நிலையில், ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளுக்கு நிதியை ஈர்க்க இத்தகைய வணிகரீதியிலான, கவர்ச்சியான செயல்முறைகளை விளம்பரப்படுத்த வேண்டியுள்ளது.

ஆபிரிக்க, ஆசிய நாடுகளில் உணவுப் பற்றதக்குறைக்கான காரணம் விளைச்சல், உற்பத்தி குறைவு என்பவற்றை விட, அவற்றுக்கான தொழில்நுட்பத் தடைகளை விட, அரசு கொள்கைகள், வர்த்தக தடைகள் போன்ற முதலாளித்துவ வணிக நடைமுறைகளே காரணமாக உள்ளன. இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் விவசாயம் மேற்குலகின் தேவைகளுக்காக பணப்பயிர்களின் உற்பத்திக்கு மடை மாற்றப்பட்டு வளர்ந்த நாடுகளில் அரசின் மானியம் பெற்று உற்பத்தி செய்யப்படும் விவசாய- உணவு பொருட்கள் இறக்குமதியுடன் போட்டியிட முடியாமல் உணவு உற்பத்தியில் தற்சார்பு அழிக்கப்படுகிறது.

மேலும் ஒரு அமெரிக்கன் போலவோ இல்லை ஐரோப்பியன் போலவோ ஏழை நாடுகளின் மக்கள் இறைச்சியை அதிக அளவில் உட்கொள்ள முடியாது. காரணம் ஆட்டுக்கறி கிலோ ரூபா 500 இற்கும் போது, சாதாரண மக்கள் அதை நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலை இங்கே இருக்கிறது. எனவே இறைச்சி, முட்டை போன்றவற்றை நுகரக்கூடிய தேவை ஏழைகளுக்கு இருந்தாலும் அவை அவர்களுக்கு எட்டாக் கனியாவே உள்ளது. இதன்படி இன்றைய உலகில் இறைச்சிக்காக அழியும் சுற்றுச் சூழல் என்பது மேற்கத்திய நாடுகளில்தான் இருக்க முடியும்.

பூமியின் சுற்றுச் சூழலை அழிப்பதில் முதலாளித்துவ நாடுகளும், நிறுவனங்களுமே முதன்மைக் காரணமாக இருக்கும்போது அவர்களால் பணியிலமர்த்தப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், குண்டு பல்பை எரிக்காதீர்கள் பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தாதீர்கள் என்று நம்மிடம் உபதேசம் செய்வது போலத்தான் இந்த இறைச்சி சுற்றுச் சூழல் நேசமும்.

இந்த உணவுப் பற்றாக்குறைக்கு செயற்கை இறைச்சி தீர்வாக இருக்க முடியாது. செயற்கை இறைச்சியை தயாரிக்கும் தொழில் நுட்பங்களை வளர்த்து, தொழிற்சாலை அமைத்து வணிக ரீதியான செயல்முறைக்கு கொண்டுவர 10 முதல் 20 ஆண்டுகள் வரை பிடிக்கலாம். இதற்கான தொழில் நுட்பத்திற்கு காப்புரிமை வழங்கப்பட்டு பெரும்பான்மை மக்களுக்கு பயன்படாமல் விலை உயர்த்தப்பட்டு விடும். இந்தியா போன்ற நாடுகளில், காப்புரிமை பெறப்பட்ட செயற்கை இறைச்சியை அறிமுகப்படுத்தி இறைச்சிக்கு மேற்கத்திய பன்னாட்டு நிறுவனங்களை சார்ந்திருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தும். மேலும் உணவுப் பற்றாக்குறைக்கு ஏற்றத் தாழ்வான நுகர்வும், அந்த நுகர்வைத் தீர்மானிக்கும் முதலாளித்துவ கொருளாதாரமுமே அடிப்படைக் காரணம். அதை இந்தக் கண்டுபிடிப்பு மாற்றிவிடாது.

கரியமில வாயு போன்ற சுற்றுச் சுழலை பாதிக்கும் வாயுகளை வெளிப்படுத்தும் வாகன உற்பத்தி, நச்சு வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலை நுட்பங்கள் இவற்றுக்கு மத்தியில் கால்நடைகள் வெளியிடும் மெதேன் சுற்றுச் சூழல் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதால், செயற்கை இறைச்சிக்கான ஆராய்ச்சி தேவை என்று சொல்வதும் பொருத்தமற்றதாகவே இருக்கிறது.

மத்தியகாலத்தில் மதத்திடம் கட்டுண்டுகிடந்த அறிவியலை விடுதலை செய்ய வேண்டியிருந்தது. தற்போதும், முதலாளித்து சந்தைப் பொருளாதாரத்திடம் கட்டுண்டிருக்கும் அறிவியலை விடுதலை செய்வதே உணவுப் பற்றாக் குறைக்கும், சூழல் மாசடைதலுக்கும் மட்டுமின்றி அனைத்து அறிவியல் முன்னேற்றத்திற்கும் தீர்வாக இருக்க முடியும்.

- மார்டின் -



# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

வெற்றி வேலனுக்கு அரோஹரா...!

சிறப்புமலர் 04.09.2013

## நல்லூரான் திருவடியே சரணம்

கந்தா உன் திருவடியே சரணம்
கவி பாடித் துதிக்கின்றேன் உன்னை
அல்லற்படும் அடியார் துயர்
அறுக்கும் நின் வேலதனால்

தஞ்சமென அடைந்தேன் சண்முகா
தயை புரிவாய் வடிவேலவா
அழகுக்கு அரசானாய் குமரா-அந்த
ஆனந்தக் கூத்தனின் மைந்தனே வேலவா

எந்தன் துயர் தீர்க்க என்றும்
வண்ண மயில் ஏறி வந்திடுவாய் சண்முகா
உந்தன் திருவடியே சரணம்
என்னை காத்திடுவாய் சண்முகா

வல்லிபுரம் ஹரிச்சந்திரன்,
சுழிபுரம்.


சேவற்கொடியோனே முருகா சரணம்!



தட்ஷா
அழகுக் கலையகமும் பயிற்சி நிலையமும்

மணப்பெண் அலங்காரம், மணப்பெண்களுக்கான முக ஒப்பனைகள் அனைத்துவகையான முக ஒப்பனைகள், சிறுவர், மகளிருக்கான ஹெயர் கட்ஸ் & ஒயில் மசாஜ் மெனிகியூர், பெடிகியூர் & நக அலங்காரம் (Nail Arts), பேர்மிங் (Perming), ஸ்ரெயிற்னிங் (Straightening), ரீ-பொண்டிங் (Re-Bonding) & கலரிங் (Colouring)

Special Bridal Packages & Wedding packages are Available

இல. 84, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 9713, 077 33 83643 E-Mail: thadsha83@yahoo.com



வல்வினைகள் தீர்க்கும் நல்லை நாயகா..!
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்குச் சிறந்த ஸ்தாபனம்
அசோகா நகை அகம்





இல:111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 6290

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம்
22 கரட் தங்க நகைகளுக்கு
ASOKA JEWELERS





தேரேறி வரும் நல்லை குமரா..! எங்கள் வாழ்வில் உந்தன் அன்பைத் தந்தருள்வாயே...!!

ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை
Eswaran Transport Service
Highway Transports & Government Contractors







69,115, Kasthuriyar Road, Jaffna.
Tel: 021 222 2813, 021 222 4317
Mobile: 077 3865439

No: 01, Kandy Road, Karadipoku, Kilinochchi
Tel: 021 2285306, 021 2285307



ஈஸ்வரன் ரேடர்ஸ்
ஈஸ்வரன் ரேடிங் கம்பனி
ஈஸ்வரன் போக்குவரத்துச் சேவை
ஈஸ்வரன் பயணிகள் சேவை
ஈஸ்வரன் கூரியர் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம் பஸ் சேவை
201 B, Dam Street, Colombo 12, Tel: 2435247 Fax: 2433889
நம்பிக்கை - பாதுகாப்பு - சௌகரியம் Hot Line: 0777674119



வெற்றி வேலனுக்கு அரோஹரா...!

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர் 04.09.2013



தேரேறிவரும் நல்லைக் குமரனுக்கு அரோஹரா...

## கிருஷ்ணா நகை மாளிகை

குறித்த நேரத்தில் குறித்த தவணையில் தரம் குன்றாத 22 கரட் தங்க நகைகளைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

கிளை : கிருஷ்ணா அடகுக்கடை
இல- 370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

இல- 09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5046



அல்லல் அறுந்து ஆனந்தம் பொங்கிட தேரேறி வாருமையா நல்லைக் குமரா....

## V.S.P லக் ஓயில்

தயாரிப்பாளரும்
ஏக விநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்

இல:26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 0212224135, 0212229165



தீராத வினைகளை வேரறுக்கும் வேலனுக்கு அரோஹரா....!

## வேல்முருகன் வாணிப நிலையம்

தற்கால நவநாகரிக கட்டடங்களுக்கு ஏற்ப சகல விதமான வர்ண பெயிண்ட் வகைகளும் சுண்ணாம்பு மற்றும் கட்டடப் பொருள் விற்பனையாளர்

இல.56A, 295A மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9437



நல்லூர்க் கந்தனுக்கு அரோஹரா...!

## கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதி பயிற்சிப் பாடசாலை)

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்
- வான், முச்சக்கரவண்டி, உழவு இயந்திரம் (டெக்டர்), அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் இரண்டு வருடம் பூர்த்தியானால் கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெறமுடியும்.
- கனரக வாகன (AD) சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி பெறலாம்.
- தவணை முறைக் கட்டணம்
- எழுத, வாசிக்க, தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை

**கிளைகள்**

பருத்தித்துறை
தொ.பே: 0214923201, 0714546958

சாவகச்சேரி:
தொ.பே: 0214923202, 0212270700

கிளிநொச்சி:
தொ.பே: 021 228 5505, 0714546955

நெல்லியடி:
தொ.பே:021 300 6550, 0714546957


விசுவமடு:
தொ.பே:021 320 1515, 0714546955

சுன்னாகம்:
தொ.பே: 021 224 2022, 0714546956

*தலைமைக் காரியாலம்:*

**226,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

தொ.பே: 021 222 4353, 0214923200, 0714546952, 0777225292





வெற்றி வேலனுக்கு அரோஹரா...!

# நல்லூர் கந்தன் தேர்த் திருவிழா

**சிறப்புமலர் 04.09.2013**

## தேரடியில் வடமதனை நாடு மனமே

ஆனபுகழ் அத்தனையும் ஆறுமுகன் கழலடிக்கே
ஆனதென்று நெஞ்சுருகப் பாடு மனமே
ஞானஒளி பெற்றருளும் நாயகன் பெருங்கருணை
ஞாலமதில் உயர்ந்ததெனக் கூறு மனமே
கானமழை பாடியருள் காலடியில் விழுந்தே
கசிந்துருகி கந்தன்புகழ் ஓது மனமே
தேனமுதம் எனவருளும் தேவசேனா பதியினுடை
தேரடியில் வடமதனை நாடு மனமே

**தென்புலோலியூர் பரா.றமேஸ்.**




நல்லை நாயகனே தேரேறி வருக! வருக!! வருக!!!

பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் துல்லியமான பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா?விழுந்துவிட்டனவா? முன்னரைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட–இளைய தலைமுறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட

யாழ்ப்பாணத்தில் கை தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

# எரிக்கணேஷ்

முக்குக் கண்ணாடியகமும் பல் கட்டுமிடமும்

இல. 564, 566 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2486

கட்டுப்பற்களைச் சுத்தம் செய்வதற்கான மாத்திரை விற்பனையில் உண்டு.

**கிளைகள்:**
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல 80, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.



அலங்காரக் கந்தனுக்கு அரோஹரா....

# ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# RAMCO CEMENT



ராம்கோ சீமெந்தை பயன்படுத்துங்கள்!
உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்!

ஆசியாவின் முதலாம் தர(நம்பர்-1) தொழிற்சாலையாக தெரிவு செய்யப்பட்ட RAMCO சீமெந்து (கோபுரமார்க்) என்பதை மக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

★ இலங்கையின் SLS 107 தரச்சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து
★ 50 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் சீமெந்து
★ மிகமிக உயர்தரம் கொண்ட சீமெந்து
★ ISO 9001 உலகத்தர சான்றிதழ் பெற்றுக்கொண்ட சீமெந்து

ராம்கோ சீமெந்தின் ஏக இறக்குமதியாளர்கள்

# ஈஸ்வர பகவான் அன் கம்பனி

தொ. பே: 021 222 7603, 021 222 2350

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பக்தர் படை சூழ இரதத்திலே பவனிவரும்
நல்லைக் குமரனுக்கு அரோஹரா...!






AHUJA

# கோபுரம் சவுண்ட்ஸ்

இல.38, மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

Wharfedale Pro max SHURE interM DAS AHUJA Peavey BOSS MX Soundking YAMAHA JBL SENNHEISER



வெற்றி வேலனுக்கு அரோஹரா...!

# நல்லூர் கந்தன் தேர்த்திருவிழா

சிறப்புமலர் 04.09.2013




புள்ளி மயிலோனே முருகா சரணம்!
வள்ளி மணாளனே முருகா சரணம்!!

ஆங்கில மருந்து வகைகள், ஊட்டச்சத்துக்கள் மற்றும் பால்மா வகைகள் அனைத்தையும் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**ஆர். வி.ஜி**



**மருந்தகம்**

R.V.G. ஸ்தாபனம்

504, ஆஸ்பத்திரி வீதி,
(O.P.D முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 021 222 2129

58, நல்லூர் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொ. பே. இல : 021 222 6806


## நல்லையிலே கோயில் கொண்ட எம்பிரானே...!

வந்தனை புரிந்திடின் வந்தருள் பொழிந்திடும்
விந்தைவேல் ஏந்திடும்- கந்த வேளே
முந்தையொரு நாளிலே தென்பொதிகை மீதிலே
பைந்தமிழைக் கும்பமுனிக்-கோதினாயே
வெந்திடும் மனத்துடன் நொந்துடல் பதைத்திட
இந்தநிலம் மீதில்நான்- வாழ்வதாமோ
சிந்தையில் இருத்தியுன் செந்நிறப் பதம்தொழும்
எந்தனிடர் போக்குவதும்-எந்த நாளோ
மந்த மதியால் மயங்கி மந்தையினைப் போல் அலையும்
அந்தநிலை நீயெனக்குத்-தந்திடாதே
அந்தகனும் ஆனஅவன் தன்னெருமை மீதினிலே
வந்தெனையும் மாய்த்திடமுன்-வந்திடாயோ
சந்ததமும் அடிபணியும் அன்பரலை ஓடிவந்து
சங்கமிக்கும் யாழ்ப்பாணம்-நல்லை மண்ணில்
சந்தப்புகழ்ப் பாமணக்கும் செந்தமிழர் பூமியிலே
வந்தமர்ந்து கோயில்கொண்ட-எம்பிரானே!

சின்னையா சிவபாலன்
மன்னார்.




நல்லூர்

அழகு வாய்ந்த
மலர்கள் தானே நீங்கள்! உங்கள் அழகு மெருகூட்டும்...

New Selection

**சரவணா புடைவையகம்**

NALLUR **SARAVANA TEX**



527, Pointpedro Road, Nallur, Jaffna.
T.P.: 021 222 1723 Fax: 021 222 1723
527, பருத்தித்துறை வீதி,
நல்லூர் வீதி(பின் வீதி), சிவன் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.
Email: nallur.saravana@gmail.com

நல்லைக் கந்தனுக்கு அரோஹரா





இருளை நீக்கிட வருவாயய்யா...!

அமெரிக்கன் குழநீருக்கான யாழ்.மாவட்ட ஏகவினியோகஸ்தர்:

E.S.P. நாகரத்தினம் சக நிறுவனம்
E.S.P Nagaratnam & Co
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே 021 222 3096







புள்ளி மயிலோனே முருகா சரணம்

**நல்லூர் திருவிழாக்கால மலிவு விற்பனை**

அண்ணா தயாரிப்பு பொருட்களை மலிவு விலையில் அண்ணா இடியப் பமா, அண்ணா கோப்பி மற்றும் எமது அண்ணா தயாரிப்பு உற்பத்திப் பொருட்களை வாங்குவதோடு இலவச முருகன் பாடல் புத்தகத்தையும் பெற்றுக்கொள்ளலாம்.

**அண்ணா வியாபார நிலையம்**
பருத்தித்துறை வீதி, நல்லூர்.

அண்ண உற்பத்திப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சகல பொருட்களையும் குறைவான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**அண்ணா சுப்பர் இன்**
கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
தொ.பே: 021 321 8143




உள்ளூர் உற்பத்தியான ஜீவாகாரம் சிறியோர் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்தசத்துணவு. இரசாயனக் கலவை அற்றது

உடல் வளர்ச்சிக்கு
**ஜீவாகாரம்**

உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் மக்கள் விரும்பி பாவிப்பது .

**அண்ணா தயாரிப்புக்களே!**

அண்ணா கோப்பி
அண்ணா அரிசி மா
குரக்கன் மா
ஆட்டா மா
அண்ணா மிளகாய்த் தூள் வகைகள்
அண்ணா பத்தி வகைகள்
அண்ணா பற்பொடி
அண்ணா இனிப்பு வகைகள்

**அண்ணா தொழிலகம்**

இணுவில்,தொலைபேசி இல: 021 224 1565

# சதுரகிரி மகாலிங்கம் மலை



ஆன்மீகம் 106

ஒரு சொட்டு இங்கில் டிரான்ஸ்பர் ஆர்டர் போட்டால் பஞ்சாப் பறப்பான் அவனுக்கு நீங்கள் துணைபோகக் கூடாது என்றேன்.

உடனே டீ.சி. கனகய்யாவைக் கூப்பிட்டு இவர்கள் கொடுத்த மனுவைச் சென்னைக்கு அனுப்புங்கள் என்றார். கமிசனர் என்றால் கமிசனர் திரு.வி.ராமதாஸ் ஐ.ஏ.எஸ். அவர்கள்தான் உண்மையான கமிசனர்.

உடனே டீ.சி. கனகய்யா என் காதைக் கடித்தார். நீங்களே சென்னையில் கமிசனரிடம் சொல்லி ரூ12 லட்சம் ஆணையர் நிதியிலிருந்து கொடுக்கச் சொல்லுங்கள் என்றார்.


சென்னைக்குச் சென்றதும் கமிசனரைத் தருமச் செயலுக்குக் கையெழுத்துப் போடச் சொன்னேன்! கமிசனர் நிதியிலிருந்து ஒவ்வொரு மலைக்கும் பல லட்சம் செலவு செய்த பெருமை திரு.வி.ராமதாஸ் ஐ.ஏ.எஸ் அவர்களைச் சாரும்.

அதேபோல் அடுத்த வருடம் ஆடி அமாவாசை அன்று கமிசனர் கொடுத்த 12 லட்சம் வேலை ஒழுங்காய் நடந்து இருக்கிறதா என்று பார்க்க மீண்டும் கமிசனர் வி.ராமதாஸ் ஐ.ஏ.எஸ் அவர்களைக் கூப்பிட்டேன். வேறு வேலை இருக்கிறது என்றார். இதை விட பெரிய வேலை எதுவும் இல்லை என்றேன். இல்லை நான் திருவண்ணாமலைக்குப் போகிறேன் என்றார்.

அதேபோல் இந்த ஸ்தலம் பல லட்சம் மடங்கு சக்திவாய்ந்தது என்றேன். முடிவில் அவர் வரவில்லை.

நான் என் குருவின் மீது கடும் கோபம் கொண்டேன். எனக்கு ஒரு பெரிய அதிகாரி வேண்டும் என்று மானசீகமாய் கூப்பிட உன் கையில் இருப்பதை நீ யாரை நினைத்து உன் உடலில் தேய்த்தாலும் அவர் உன்னிடம் வருவார். இதற்காகவா என்னைக் கூப்பிட்டாய் என்றார்.

அடியேன் ஆடி அமாவாசை வருவதற்கு மூன்று நாட்கள் உண்டு. எந்த அதிகாரி உடனே வரப்போகிறார்கள் என்று நினைத்து கோயில் இணை ஆணையர் திரு.என்.எஸ்.ராமச்சந்திரன்



அனனை சததருடன தரு.வ.ராமதாஸ ஜ.ஏ.எஸ.
சதுரகிரிசுந்தர மகாலிங்க மலை பலாவடிக் கருப்புசாமி
கோவில் பௌர்ணமி பூஜை.

அவர்களைப் போனில் கூப்பிட்டு கமிசனரோடு பெரிய அதிகாரி யார்? என்றேன். அரசுச் செயலர் இருக்கிறார். மிகவும் நல்லவர்! கண்டிப்பானவர்! என்று கூறினார்.

யாராய் இருந்தால் எனக்கு என்ன? அவரது போன் *நம்பர் கொடுங்கள் என்றேன். மாலை 4 மணிக்கு அவரிடம் ராஜ்குமார் சுமாமிகள் பேசுகிறேன் என்றேன்.

இறைவனின் ஆணை! நீங்கள் ஆடி அமாவாசை சதுரகிரி மகாலிங்கம் மலைக்கு வரவேண்டும் என்றேன்.

மறுமுனையில் அரசுச் செயலர் பதில் நீங்கள் இருக்கும் இடத்திற்கு நான் வரட்டுமா? இல்லை இங்கு நீங்கள் வரமுடியுமா? என்றார்.

எனக்கு அரசாங்கக் கார் இல்லை. பஸ் ஏறித்தான் வரமுடியும். நானாகவே வருகிறேன் என்று கூறி மாலை 6 மணிக்குச் சென்றேன்.

எனது பழைய துணிகளையும் ஜோல்னா பைகளையும் பார்த்து ராஜ்குமார் சுவாமிகள் வரவில்லையா? என்றார். அடியேன் தான் என்றேன். ஆச்சரியப்பட்டார். நீங்கள் தங்கமும் வைரமும் ஜொலிக்க ஏதோ ராஜ கம்பீரமாய் வருவீர்கள் என்று நினைத்தேன். நீங்கள் ஏதோ ஒன்றும் இல்லாத பரதேசி போல் வேடம் அணிந்து வந்திருப்பதும் நான் கேள்விப்பட்டதும் ஆச்சரியமாய் இருக்கிறது என்றார்.

அரசுச் செயலர் நம்மை நக்கல் செய்கிறார் என்று நினைத்து என் கையை நாக்கில் நக்கி முகர்ந்து பார்த்தேன். என்னையே பார்த்தார். பாருங்கள் என் உடலே எனக்கு நாற்றம் அடிக்கிறது. உலகத்தில் நாற்றம் அடிக்காத சாமியார்களை நீங்கள் கண்டதுண்டா? என்றேன்.

இல்லை என்றார்.

அப்படியென்றால் இந்த அரசுச் செயல் பதவியில் உங்களுக்கு ஆபத்து பின் நிறைய வர வாய்ப்புண்டு என்றேன்.

இறைவன் கட்டளை வர முடியுமா? முடியாதா? என்றேன்.

உடனே திரு. என்.எஸ்.ராமச்சந்திரன் ஜே.சிக்கு போன் செய்து நான் ஆடி அமாவாசை சதுரகிரி மலைக்கு ராஜ்குமார் சுவாமிகளுடன் போகிறேன். இரண்டு டிக்கட் வேண்டும் என்றார்.

அடியேன் என்னுடைய டிக்கட் இரண்டாவது கிளாஸ். நானே பணம் கொடுத்து விடுகிறேன். உங்கள் பணம் எனக்கு வேண்டாம் என்றேன்.

ஏன் என்றார். அது கோயில் தர்த உண்டியல் பணம். அந்தப் பாவம் எத்தனை தலைமுறைக்கும் என்னைச் சுற்றும் என்றேன்.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

தொடரும்

# நவிபிள்ளையின் இலங்கை விஜயம்



...இந்த வீட்டு வேலைகளில் அநேகமானவை நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் பாற்பட்டவை. அதாவது, உப பாடங்களிற்குரிய வீட்டுவேலைகள்தான். அதே சமயம்பிரதானமான கட்டாயப் பாடங்களிற்குரிய வீட்டு வேலைகள் செய்யப்பட்டுள்ளனவா?

அதென்ன உட பாடங்கள்? கட்டாயப் பாடங்கள்?

கட்டாயப்பாடங்கள் எனப்படுவது அனைத்துலக மற்றும் பிராந்திய அரசியல் யதார்த்தத்திற்கேற்ப தனது வெளியுறவுக்கொள்கையைச் சுதாகரித்துக் கொள்வது ஆகும். இதில் சித்திபெற்றால்தான் அரசாங்கத்திற்கு இறுதிப் பெறுபேற்றில் சித்தி கிடைக்கும். இதில் சித்திபெறத் தவயிதால்தான் அனைத்துலக சமூகமும் இந்தியாவும் அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன. இவ்விதம் அழுத்தங்களைக்கொடுப்பதற்குரிய ஒரு கருவியாகவே தமிழர்களின் அரசியல் கையாளப்பட்டு வருகின்றன. தமிழர்களிற்கு ஒரு கௌரவமான தீர்வை ஏற்படுத்திக்கொடுப்பது என்பது ஒரு உபநிகழ்ச்சி நிரல்தான். அதாவது உட பாடவிதானம்தான். அரசாங்கம் சீன விரிவாக்கம் தொடர்பில் அனைத்துலக மற்றும் பிராந்திய மட்டத்திலான கவலைகளைக் கவனத்தில் எடுத்து நெகழ்ச்சியான ஒரு வெளியுறவுக்கொள்கையை உருவாக்குமாயிருந்தால் உலகமே ஈழத்தமிழர்களைக் கைவிட்டுவிடும் அல்லது 13-வது திருத்தச்சட்டத்துடன் திருப்திப்படுமாறு விட்டுவிடும். இதை இன்னும் செறிவாக- அரசாங்கம் எவ்வளவுக் கெவ்வளவு மேற்கு நாடுகளிற்கும் இந்தியாவிற்கும் விட்டுக்கொடுக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஈழத் தமிழர்களும் கைவிடப்படுவார்கள்.

நவநீதம்பிள்ளை இங்கு வந்துதான் நிலைமைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. நாலாங்கட்ட ஈழப்போரின் கடைசிக் கட்டத்தில் என்ன நடந்தது என்பது சக்திமிக்க நாடுகள் எல்லாவற்றுக்கும் நன்கு தெரியும். தொழில்நுட்ப அர்த்தத்தில் அதனை முழுக்க முழுக்க சாட்சிகளற்ற யுத்தம் என்று கூற முடியாது. சக்திமிக்க நாடுகளின் செய்மதிகளிற் பொருத்தப்பட்ட சக்திமிக்க கமராக்களிற்கூடாக பெறப்பட்ட தகவல்கள் உண்டு. இது தவிர யுத்த களத்தில் பெறப்பட்ட கைபேசிக் கமராப் பதவுகள் உண்டு. இவற்றுடன் போரின் முடிவில் கைதிகளும் அதிகமானவர்களின் வாக்குமூலங்கள் சாட்சியங்கள் உண்டு. இவையெல்லாம் சக்திமிக்க டயஸ் பொறாவினால் தொகுக்கப்பட்டு யாருக் குக்கொடுக்கப்பட வேண்டுமோ அவர்களுக்குக்கொடுக்கப்பட்டுவிட்டன. எனவே, நவநீதம்பிள்ளை ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகவல்களை நேரில் வந்து உறுதிப்படுத்தினார் என்பதே சரி. இத்தகைய பொருள்படக் கூறின் அவரின் வருகை ஒரு விதத்தில் குறியீட்டு முக்கியத்துவம் உடையது. நெகிழ மறுத்த ஓர் அரசாங்க மானது ஓரளவிற்கு இறங்கி வருவதை அது காட்டுகிறது. ஆனால், அந்த நெகிழ்ச்சியானது தமிழர்கள் தொடர்பில் மட்டும் காட்டப்பட்டால் அது உபபாடவிதானத்துடன் சம்பந்தப்பட்ட வீட்டு வேலைதான். பதிலாக கட்டாயப் பாடங்களிலும் அப்படியான வீட்டு வேலைகள் நடந்திருக்கின்றனவா என்ற கேள்வியே இங்கு முக்கியமானது.

கடந்த சில மாதங்களில் இலங்கை அரசாங்கம் இரண்டு பாதுகாப்பு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுள்ளது. முதலாவது சீனாவுடனானது. இரண்டாவது இந்தியா மற்றும் மாலை தீவுகளுடனான கடல் முக்கூட்டு உடன்படிக்கை. குறுகியகால இடைவெளிக்குள் செய்யப்பட்ட உடன்படிக்கைகள். இவை தவிர, கொழும்பில் சீனாவின் உதவியுடன் ஒரு பிரமாண்டமான கொள்கலன் முனையம் திறக்கப்பட்டுள்ளது. இப்பிராந்தியத்தில் உள்ள பெரிய கொள்கலன் முனையாக அது கூறப்படுகிறது. இவை அனைத்தையும் விட மற்றொரு நகர்வு அதிகம் சந்தடியெழாது நிகழ்ந்திருக்கிறது. அதுதான் இலங்கைப் படைத்துறைக்கும் அமெரிக்க பசுபிக் பிராந்திய படைத்துறைக் கட்டமைப்புக்கும் இடையிலான ஒரு பாதுகாப்பு ஒத்திகை ஆகும். ஒரு தென்னிலங்கை ஊடகவியலாளர் கூறினார், இது தொடர்பாக இலங்கை ஊடகங்கள் அதிகம் பரபரப்பை ஏற்படுத்தவில்லை என்று. அரசாங்கமானது சின விரிவாக்கத்தின் ஓர் அலகாக காணப்பட்ட போதிலும் அமெரிக்காவுடனான அரசுக்கும்- அரசுக்கும் இடையிலான அதன் கட்டமைப்பு ரீதியிலான உறவுகள் பலமாகவிருப்பதையே இது காட்டுவதாக மேற்படி ஊடகவியலாளர் கூறினார். சீன விரிவாக்கத்தின் ஓர் அலகாக காணப்படும் இலங்கையானது சீனாவுடன் பாதுகாப்பு உடன்படிக்கையைச் செய்துகொண்டிருந்தாலும் கூட அமெரிக்காவுடன் செய்துகொண்டதுபோல் படைத்துறை ஒத்திகையை இதுவரையிலும் சீனாவுடன் செய்ய முன்வரவில்லை. என்பதை ஒரு தென்னிலங்கை ஊடகவியலாளர் சுட்டிக்காட்டினார்.

குளோபல் தமிழ்

தொடரும்




# சிறுவர் அரங்கம்

566

## வேடன்





ஒரு ஊரில் ஒரு பெரிய ஆற்றங்கரை இருந்தது. அந்த ஆற்றங்கரையின் ஓரத்தில் ஒரு பெரிய அரசமரமும் இருந்தது.

### பஞ்சதந்திரக் கதைகள்

அந்த அரச மரத்தின் கிளையில் ஒரு புறா எப்போதும் வந்து அமர்வது வழக்கம். அப்படி ஒரு நாள் அந்த மரக்கிளையில் புறா அமர்ந்து ஆற்றில் ஓடும் நீரைப் பார்த்துக் கொண்டிருந்தது.

அப்போது ஆற்று நீரில் கட்டெறும்பு சிக்கி தத்தளிப்பதைக்கண்டது. மறுநிமிடம் அந்தப் புறாவிற்கு அந்தக்கட்டெறும்பு மீது பரிதாபமும், இரக்கமும் பிறந்தது. மறுவிநாடி அது ஏதோ சிந்தித்துவிட்டு அரச மரத்தின் இலையில் ஒன்றை பறித்து எறும்பு தத்தளிக்கும், இடத்திற்கு சற்று முன்னால் போட்டது.



ஆற்றுநீருடன் மெல்ல அடித்து வரப்பட்ட எறும்பு அந்த அரச இலையின் மீது பட்டதும் கப்பென அந்த இலையைப் பற்றிக் கொண்டது.

இலைகள் நீரில் அமிழாது அல்லவா? எனவே, அந்த இலையின் மீது ஊர்ந்த எறும்பும் நீருக்குள் அமிழாமல் கரையோரம் இலையுடன் வந்தது.

கரையில் இலை ஒதுங்கியதும் இலையை விட்டு இறங்கியது. மரத்தின் கிளையில் அமர்ந்திருந்த புறாவிற்குத் தனது நன்றியைக் கூறியது. தினந்தோறும் எறும்பும், புறாவும் அதே மரத்தடியில் சந்தித்தன. இரண்டும் நல்ல சிநேகிதர்களாயின.

ஒரு நாள் அந்த மரத்தடிக்கு ஒரு வேடன் வந்தான். அவன் மரக்கிளையில் அமர்ந்திருந்த புறாவைக் கண்டான். ஆனால், வேடன் வந்ததையோ, அவன் தன்னைப் பார்த்ததையோ புறா கவனிக்கவே இல்லை.

வேடன் தன் அம்பையும், வில்லையும் எடுத்தான். மரக்கிளையில் இருந்த புறாவை நோக்கி குறி வைத்தான். ஏதும் அறியாத புறா பேசாமல் எங்கோ பார்த்தபடி இருந்தது. ஆனால், வேடனின் காலடியில் நின்ற எறும்பிற்கு வேடன் தனது நண்பனான புறாவை குறி வைப்பது வெகு எளிதில் தெரிந்துவிட்டது.

உடனே தன் நண்பனின் உயிரை காப்பது எத்தனை அவசியமானது என்பதை உணர்ந்தது. அடுத்த நிமிடம் அந்த வேடனின் காலில் நறுக்கென்று கடித்தது. எதிர்பாராமல் கட்டெறும்பு கடித்த வலியில் வேடனின் குறி தவறியது. அவன் எய்த அம்பு எங்கோ போய் விழுந்தது.

இப்படி ஏற்பட்ட திடீர் சத்தத்திலும், சலசலப்பிலும் கவனம் சிதறிய புறா வெடுக்கென திரும்பியது. மறுநிமிடம் தனக்கு வரவிருந்த பேராபத்தை உணர்ந்தது. தன் நண்பனான எறும்பு தன்னைக் காப்பாற்றியதையும் உணர்ந்தது. மறுபடியும் வேடன் தன்னை நோக்கி குறி வைக்கும் முன்பாக அந்த இடத்தை விட்டுப் பறந்தது.

மறுநாள் தன் நண்பனான எறும்பைப் பார்த்து நன்றி தெரிவித்தது. இரண்டும் ஒன்றின் உயிரை ஒன்று காப்பாற்றிய நன்றியில் கடைசிவரை நட்புடன் இருந்தன.

**நாம் ஒருவருக்கு உதவினால் நிச்சயம் நமக்கு தேவைப்பட்ட சமயத்தில் உதவ யாரேனும் வருவர்.**

# எமக்கு எதிராக தீர்மானம் கொண்டு வர அமெரிக்காவுக்கு என்ன உரிமை?

## நவிபிள்ளையிடம் கேட்டேன் என்கிறார் கோத்தபாய

(கொழும்பு)

**ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்றைக் கொண்டு வருவதற்கான எந்தவித தார்மீக உரிமையும் அமெரிக்காவுக்கு இல்லை என ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் இலங்கைப் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

உலகின் பல்வேறு பகுதிகளிலும் அமெரிக்கப் படைகள் கொடூரமான செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் நிலையில் இலங்கைக்கு எதிராக ஜெனீவா ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வருவதற்கு அமெரிக்காவுக்கு என்ன உரிமை இருக்கின்றது எனவும் அவர் நவநீதம்பிள்ளையிடம் கேள்வி எழுப்பினார்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தநவநீதம்பிள்ளை தலைமையிலான ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் குழு இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசியது.

இந்நிலையில் அமெரிக்கா குறித்து தான் வெளியிட்ட கருத்துக்கள் தொடர்பில் நவநீதம்பிள்ளை பதில் எதுவும் தெரிவிக்காது மௌனமாக இருந்தார் எனக் குறிப்பிட்ட கோத்தபாய ராஜபக்ச என்னுடைய கருத்தை நவநீதம்பிள்ளை ஏற்றுக்கொண்டுள்ளார் என நான் கருதவில்லை. ஆனால் உலக வல்லரசின் செயற்பாடுகளால் ஏற்பட்டுள்ள மரணங்கள் அழிவுகள் தொடர்பில் உலகமே அறியும் எனவும் கூறினார்.

மேற்கு நாடுகளால் மேற்கொள்ளப்பட்ட கொடூரங்கள் தொடர்பிலான விவகாரங்களைக் கையாள்வதில் ஐ.நாமனிதஉரிமைகள்ஆணைக் குழு எதிர் கொண்டுள்ள நெருக்கடியைப் பிரதிபலிப்பதாகவே நவநீதம்பிள்ளையின் அந்த மௌனம் அமைந்திருந்தது. அமெரிக்காவை சீற்றத்துக்கு உள்ளாக்காத வரையில் தான் நவநீதம்பிள்ளை ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளராக இருக்க முடியும் எனவும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கோத்தபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார். (அ-2)

# தேர்தல் விதி மீறல்களுக்கு எதிராக தேசப்பிரிய நடவடிக்கை எடுக்கவில்லை பொன்சேகா குற்றச்சாட்டு

தேர்தல் விதி மீறல்களுக்கு எதிராக தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளாரென ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஆளும்கட்சி தேர்தல் விதி மீறல்களில் ஈடுபட்டு வருவதாகவும் இதனைத் தடுத்து நிறுத்த தேர்தல் ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டாரெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்கின்றது. சில பகுதிகளில் பிரசார கூட்டங்களை நடத்த அரசாங்கம் தனது கட்சிக்கு அனுமதியளிக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரசார நடவடிக்கைகளை ஒடுக்க மேற்கொள்ளும் முனைப்புக்களை வெட்கம்கெட்ட செயலாகவே கருத வேண்டும். ஜனநாயகம் பற்றி உரக்கக் குரல் கொடுக்கும் தரப்பினர் எனது கட்சிக்கு தொடர்ச் சியாக அழுத்தங்களை பிரயோகி த்து வருகின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சி இனிவரும் காலங்களில் தமக்கு சவாலாகத் திகழாது என்ற காரணத்தால் அரசாங்கம் எனது கட்சியை இலக்கு வைத்து அடக்குமுறைகளை கட்டவிழ்த்து வருகிறது.

அரசாங்கம் நிச்சயமாக தேர்தலில் வெற்றியீட்டும் என்ற நம்பிக்கையில்லாத காரணத்தினால்தான் எனது வேட்பாளர்களை அரசாங்கம் துன்புறுத்தி வருகிறது என்றார்.

இதேவேளை, குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாகவும் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் தேர்தல்களை நடத்த முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தாம் கடமைகளை சரிவரச்செய்யவில்லை என ஜனநாயகக் கட்சி கருதினால் அது குறித்து மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# இந்தியாவுடன் இலங்கை நட்புறவுடன் இல்லை

## மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன்

1974ஆம்ஆண்டுஇந்தியா கச்சதீவை இலங்கையிடம் ஒப்படைத்தது. 40 ஆண்டுகளுக்கு முன் இருந்த சூழ்நிலை வேறு தற்போது இருக்கும் சூழ்நிலை வேறு. அப்போது இலங்கை நம்மிடம் நட்புறவுடன் இருந்தது. தற்போது இலங்கை நம்மிடம் முன்பு போல் இல்லை. இந்த நிலையில் கச்சதீவை திரும்ப பெறுவது அவசியம் என்று இந்திய மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கு விரோதமான செயல்களில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. இந்திய மீனவர்கள் கச்சதீவு அருகில் மீன்பிடிக்கச் சென்றால் அவர்களைக் கைது செய்வது போன்ற செயல்களில் இலங்கை கடற்படை ஈடுபடுகிறது.

இந் நிலையில் கச்சதீவைத் திரும்ப பெறுவது அவசியம். இது பற்றி இந்திய பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோரிடம் தொடர்ந்து வலியுறுத்துவேன் என்றும் அவர் கூறினார். (அ-2)

# அரசியல்வாதிகள் பொய் கூறுவதில் முன்னணி வகிக்கின்றனர்-டளஸ்

(கொழும்பு)

அரசியல்வாதிகள் பொய் கூறுபவர்கள் எனவும் அவர்கள் காலையில் கூறும் பொய்கள் மாலையில் உறுதிப்படுத்தப்படுகின்றன எனவும் அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கொன்றில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த வாரம் செய்தியாளர் சந்திப்பொன்றை நடத்திய ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நவிபிள்ளை அம்மையார் வெளிக் கதவில் இருந்து உள்ளே நுழையும் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பின் கதவைத் திறந்து கொண்டு தப்பிச் சென்றதாக கூறியிருந்தார்.

இவ்வாறு மனித உரிமை ஆணையாளருக்கு முகம்கொடுக்க முடியாதமையாலேயே ஜனாதிபதி நாட்டில் இருந்து தப்பிச் சென்றதாக அத்தநாயக்க தெரிவித்திருந்தார்.

எனினும் அத்தநாயக்க ஜனாதிபதியின் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விடயத்தை விளக்கமாக கேட்டிருந்தால் நவிபிள்ளை அம்மையார் 31 ஆம் திகதி வரை இலங்கையில் இருப்பார் என்பதையும் ஜனாதிபதி 28 ஆம் திகதி நாடு திரும்பி விடுவார் என்பதையும் அவர் 30 ஆம் திகதி நவிபிள்ளையைச் சந்திப்பார் என்பதையும் அறிந்து கொண்டிருக்கலாம். அரசியல் உலகமே இப்படித்தான்.

இதுபோன்றே பெலாரஸ் எனும் நாடு எங்கிருக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தினால் ஓரங்கட்டப்பட்டதென்றும் அது ஒரு வறிய நாடு என்றும் அத்தநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

இணையத்தளத்திற்குச் சென்று தேடிப்பார்த்தால் அத்தநாயக்க கூறியது பொய்யான தகவல் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

அரசியல்வாதிகள் பொய்களைக் கூறுவார்கள் என்பதை நான் தெளிவாக கூறுகின்றேன். இந்தப் பொய்களில் ஐந்து வருடத்திற்கான பொய்களும் அடங்கும். ஒரு வருடத்திற்கான பொய்களும் ஒரு நாளுக்கான பொய்களும் அடங்குகின்றன.

இதனால் ஊடகவியலாளர்கள் அரசியல்வாதிகள் எதனைக் கூறினாலும் அதனை நன்கு ஆராய்ந்து உண்மைகளை மட்டுமே எழுத வேண்டும் என்றார். (அ-2)




- 1666 - லண்டன் மாநகரில் மூன்று நாட்களாக இடம்பெற்ற பெரும் தீ விபத்தில் 13 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அழிந்தன.
- 1781 - லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் ஸ்பானிய ஆளுநரான ஃபிலிப்பே டி நெவெ என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1870 -பிரான்ஸ் மன்னன் நெப்போலியன் பதவியில் இருந்து அகற்றப்பட்டான். அரசி யூஜின் தனது பிள்ளைகளுடன் லண்டனிற்கு தப்பி ஓடினாள். மூன்றாவது குடியரசு அமைக்கப்பட்டது.
- 1884 -குற்றவாளிகளை அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ்க்கு அனுப்பும் கொள்கையைப் பிரித்தானியாகைவிட்டது.
- 1888 -தான் கண்டுபிடித்த படம்பிடிகருவிக்கு ஜார்ஜ் ஈஸ்ட்மன் கோடாக் என்பதை வர்த்தகக் குறியீடாக காப்புரிமை பெற்றுக் கொண்டார்.
- 1939 -இரண்டாம் உலகப் போர்: ஐரோப்பிய போரில் ஜப்பான் நடுநிலையை அறிவித்தது.
- 1951 - கண்டங்களுக்கிடையேயான முதலாவது நேரடித் தொலைக்காட்சி ஜப்பானில் இடம்பெற்ற அமைதி மாநாட்டில் இருந்து கலிபோர்னியாவின் சான் பிரான்சிஸ்கோ நகருக்கு ஒளிபரப்பப்பட்டது.
- 1956 - வன்தட்டு நினைவகத்தைக் கொண்ட உலகின் முதலாவது கணனியை ஐபிஎம் அறிமுகப்படுத்தியது.
- 1970 - சல்வடோர் அலெண்டே சிலி நாட்டின் ஜனாதிபதியானார்.
- 1972 - ஐக்கிய அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ் ஜேர்மனியின் மியூனிக் நகரில் இடம்பெற்ற 1972 ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சலில் ஏழாவது தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்தார்.
- 1978 - அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2006 -இஸ்ரேலின் டெல் அவீவ் நகரின் பாடசாலை ஒன்றின் அடியில் கி.மு. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஒரு புதைகுழிக் குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

இறப்பு

- 2006- ஸ்டீவ் ஏர்வின், அவுஸ்திரேலிய இயற்கை ஆர்வலர், (பி 1962)

### ஜோர்ஜ் ஈஸ்றமன்



ஜோர்ஜ் ஈஸ்றமன் 1854 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி நியூயோர்க்கில் பிறந்தார். கோடாக் கம்பனியின் நிறுவுநரும் ஒளிப்படச்சுருளைக் கண்டுபிடித்தவரும் ஆவார். இவரின் ஒளிப்படச்சுருள் கண்டுபிடிப்பே புகைப்படக்கலையை சாதாரண மக்களும் பயன்படுத்த வழிவகை செய்தது. அதுவே அசையும் படங்களின் கண்டுபிடிப்புக்கும் அடிப்படையாக அமைந்தது.

1888 ஆம் ஆண்டு "கோடாக்" என்பதை வியாபாரக் குறியீடாக காப்புரிமை செய்து கொண்டார். கடைசியில் 1932 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி தன்னியக்கக் கைத்துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். "என் வேலை முடிந்தது. காத்திருப்பானேன்?" (My work is done. Why wait?) என்பதே அவர் தற்கொலைக்கு முன் எழுதி வைத்ததாகும்.

தம் வாழ்நாளில் ஏறத்தாழ 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை நற்பணிகளுக்காகக் கொடையாக அளித்துள்ளார். இக் கொடைகளை பெரும்பாலும் ரோச்சஸ்ட்டர் பல்கலைக்கழகத்திற்கும், மாசாசுச்செட்ஸ் இன்ஸ்ட்டியூட் ஒவ் டெக்னாலஜி என்னும் பல்கலைக்கழகத்திற்கும் அளித்தார்.

சரவணபவனுக்கு அரோஹரா...!

# நல்லூர் கந்தன் தேர்த் திருவிழா

## சிறப்புமலர் 04.09.2013

### ஊர்கூடி தேரிழுப்போம் வாரீர்...!

சிற்பங்கள் கூறும் சீரார்ந்த சரிதங்கள்
சிந்தையிலே பதியும் சித்திரங் களாகும்
அற்புத பாடல்கள் அருங்கலை மண்டபங்கள்
அழகாவுன் நாற்புறமும் அழகுநிழல் கூடமாகும்
பொற்பதம் தேடிநாம் பாவிகளாய் வந்தோம்
பற்றோடு எமையும் பொழுதெலாம் காப்பாயே
கற்பூர தீபமுடன் கரம் கூப்பி தொழுதோமே
கந்தனே தேரமர்ந்து கண்குளிர வாராயோ

'கலைப்பரிதி' கே.ஆர்.திருத்துவராஜா




பார் எங்கும் அருளாட்சி புரியும்
சண்முகப் பெருமானே...
சரணம்! சரணம்!! சரணம்!!!

**TKT** MARK BEST GINGELLY LUNCH OIL
**மார்க் திறம் நல்லெண்ணெய்**

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டது
இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்
4 ஆவது தலைமுறையாக சுத்தமான திறம் நல்லெண்ணெய் தயாரிப்பாளர்கள்



**தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்**
மூத்த நயினார் கோயிலடி,
நவாலி வீதி, ஆனைக்கோட்டை
தொ.பே: 021 225 5718



ஓம் சரவண பவாய நமஹ!



**ஸ்ரீ சிவாஞ்சனா ஜுவல்லறி**

***Sri Sivanchchana Jewellery***

தங்கப் பவுண் நகை வியாபாரம்



149 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே: 021 222 9227





கானமயில்நாதனுக்கு
அரோகரா..!

**சாரங்கா நகை மாடம்**
**& சாரங்கா**
**பணப்பரிமாற்று சேவை**
Saranga Nagai Madam
& Saranga Money
Exchange (PVT) Ltd



தங்கப்பவுண்
நகை வியாபரம்

157/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 222 2480, Fax: 222 6972





ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## லெ.வேணுகோபால் இராமன் ஆச்சாரி பேரின்பநாதன் (அத்தான்)

ஐம்பொன் விக்கிரகங்கள், கோயில் அசையாமணி ,கொடிமரம், கலசங்கள், அங்கிகள் ,
திருவாசிகள் மற்றும் தகட்டு வேலைகளும் செய்துகொடுக்கப்படும்

*19, கஸ்தூரியார் வீதி,*
*1 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.*

**உரிமையாளர்: பேரின்பநாதன் (அத்தான்)**
**விசாகேசன் - தொ.பே: *021 222 8784, 0776511285***





அடியார்களின் இடர்களைக்
களைந்து கடைக்கண் பார்வை
தாருமையா நல்லைக் கந்தா...!

***Jamuna Furniture***

Authorized Distributors for
Damro and Piyestra Furnitures



181, Navalar Road,
Jaffna.
Tel: 021 222 1092,
Fax: 021 222 1578,
Mob: 0777574776





அல்லல் அறுத்து
ஆனந்தம் அளித்திடையா
நல்லை நாயகனே..!

**Methu's Kids 'N' Baby Care**

195, Navalar Road,
Jaffna.
0773131622



# நல்லூர் தேர்த்திருவிழா சிறப்புமலர்-04.09.2013

## நல்லூரின் நாயகனே தேரேறி வருக!

பல்லோரும் பணிந்தேத்தும் பாலசுப்பிர
மணியனே
பரந்தாமன் மருகனே பார்வதியாள்
பாலகனே
நல்லூரின் நாயகனே தேரேறி வருக! வருக!!
நானிலத்தார் மகிழ்ந்திட நல்லதொரு
தேரிலே
எல்லோரும் பார்த்திருக்க இனிய காட்சி தந்தே
எழில் நல்லூரிலே திருவீதி வலம் வருக!
கல்லாதோர் நெஞ்சத்திலும் கவினுற
நீயிருந்தே
அருளாட்சி புரிபவனே! சரணம்!
சரணம்!

'தெய்வத்தமிழ்ச் சுடர்'
இராசையா ஸ்ரீதரன்

## தொல்லை வினை தீர்க்க வருவான் தேரினிலே....

நல்லை நகர் மீதில் உறையும் வேல் முருகன்
தொல்லை வினை தீர்க்க வருவான் தேரினிலே
பென்னம் பெரிய திருக் கோபுரங்கள் சூழும்
தொன்மை நிறைந்த யாழ்.மண்ணின் புகழ் ஓங்க
(நல்லை...)

எந்த மதத்தினரும் வந்து வணங்கிடவும்
நொந்த மனமகற்றி நோய்நொடி தீர்த்து வைத்து
சொந்த மண்ணிலுள்ளோர் தூரத்தில் இருந்தாலும்
வந்துவடம் பிடிக்க வைக்கும் திருமுருகன்
(நல்லை...)

செல்லப்பனோடு அந்த யோகனையும் சேர்த்து
நல்லருள் புரிந்து எம்மை நாளும் துதிக்க வைத்து
கொள்ளை அழகுடனே கோடி மக்கள் சூழ
அள்ளி அருள் வழங்கும் ஆறுமுகனாக
(நல்லை...)

கவிமணி அன்னைதாஸன்
ஊரெழு.

## கோலாகலம் கொண்டு குதூகலமாய் நிற்கிறியோ...?

முருகாவுன் பதிதேடி முண்டியடித் துன்னடியார்
கடலாக வந்துறையக் கவலை பறந்த தென்று
மனதாரநீயெண்ணிமகிழ்ந்துவிழாக்காணுறியோ...?

உடற்பாரம் சருகாக உளப்பாரம் குண்டாக
மனப்பாரம்கொண்டேயுன்மண்தேடிவந்தார்கள்...

இழப்புக்கள் ஒன்றாடா...? – அவர்
இருப்புக்கள் உண்டாடா...?
தெருப்பிச்சைஇனமாகத்தேய்கின்றார்உன்தமிழர்...,
மடிப்பிச்சைகேட்டேயுன்மாளிகையைக்காணவந்தார்...

ஏன் என்ற வினாவிலதாய் ஏதுமிலா இனமாக
வாழுதடாஉன்தமிழின்வண்ணமெலாம்அழிந்திட... நீ
கோலாகலம்கொண்டுகுதூகலமாய்நிற்கிறியோ...?

தீவக தியாகன்


சகல பாமசி & குறோசரீஸ் பொருட்களையும் குளோன் வகைகளையும் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ள



றூபா பன் முக வர்த்தகம்
இல. 104 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. இல: 021 222 2479

எஸ்.வி.முருகேசு
S.V.Murugesu
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
154, Hospital Road
Jaffna.



T.P:- 021 222 8899, 021 4925831

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ
22 கரட் தரமான தங்க நகைகளுக்கு நாட வேண்டிய ஒரே இடம்
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
ஆசைப்பிள்ளை அன் சன் நகைமாடம்
கே.ரி.பிளாசா, பிரதான வீதி, சங்கானை தொ.பே.இல. 021 321 2399

Rs.10
புதிய சுவை! புதிய அநுபவம்! புதிய தொழில்நுட்பம்!
அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100% சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில் நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம். பெறுமதி மிக்க பரிசில்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன.
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. 021 4926003
(3587)

# இன்று தேரேறும் நல்லைக் கந்தன் அக்கிரமங்களை வேரறுப்பான்

## குரு முதல்வரின் அருளாசிச் செய்தி



இன்று நல்லைக் கந்தனின் இரதோற்சவ திருநாள். தொல்லை வினை தீர்க்கும் இந்த நல்லைக் கந்தன் இன்று சண்முகப் பெருமானாக சித்திரத் தேரிலே ஆரோகணித்து அருள் பொழியும் நல்ல நன்னாளாகும் என நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சாரிய சுமாமிகள் தனது அருளாசிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்களை நீக்கி அருளை அள்ளி வழங்கும் முருகப் பெருமான் இந்த நல்லையம்பதியிலே வேற்பெருமானாக வீற்றிருந்து அருள்பாலிக் கின்றான். அந்த அருமைமிகு கலியுகத் தெய்வம் வள்ளி, தெய்வானை சமேதராக ஆறுமுகங்களோடு இன்று தேரிலே ஆரோகணிக்கும் காட்சி அற்புதமானது. தங்க நகைகள் எங்கும் ஜொலிக்க அழகே ஓர் உருவெடுத்தாற்போன்று அலங்காரக் காட்சி காண்பதற்குப் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

இன்று தேர்விழாக் காண வருகை தரும் அடியார்களுக்கும் மற்றும் மக்கள் எல்லோருக்கும் ஆனந்த மங்களகரமான நல்வாழ்வு நல்க வேண்டுமென முருகனை வணங்கி அருளாசிகள் வழங்கி மகிழ்கின்றோம். தேர்விழா அழித்தலைக் குறிப்பதால் கந்தப்பெருமான் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழிக்கப் புறப்படுகின்றான். இன்றைய தேர்விழா சிறப்புற நிகழவும் அடியவர்கள் நல்வாழ்வு பெறவும் எல்லாம் வல்ல முருகனை வணங்கி வாழ்த்தி நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து அருளாசி நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

# சிவபூமியான ஈழத் திருநாட்டில் அலங்காரக் கந்தனுக்கு இன்று தேர்

யாழ்ப்பாணக் குடாநாடு சிவபூமியாகிய ஈழமணித்திருநாட்டில் ஞான பூமியாக மிளிர்கிறது. பக்தர்களும் சித்தர்களும் யோகிகளும் ஞானிகளும் வாழ்ந்த யாழ்ப்பாணக்குடா நாடு முழுவதும் அலங்காரக் கந்த வேட்பெருமானின் அருளாட்சி நடைபெறுகின்றது. கி.பி 1467 இல் செண்பகப்பெருமாள் என்றழைக்கப்பட்ட புவனேகபாகு மன்னன் முத்திரைச் சந்திக்கு அருகில் ஆகம விதிமுறைகளுக்கமைய பேராலயம் அமைத்தான்.

கி.பி. 1620 இல் யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது படையெடுத்த போர்த்துக்கேயர் நல்லூர்க்கந்தன் ஆலயத்தை முற்றாக இடித்து தரை மட்டமாக்கினர். கி.பி 1834 இல் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கந்த புராணம் படித்து பயன்சொல்லும் மடாலயமாக தற்போதுள்ள இடத்தில் கோயில் அமைக்கப்பட்டது.

ஆவணி மாத அமாவாசையை தீர்த்தமாகக்கொண்டு 25 நாட்கள் மஹோற்சவம் நடைபெறும்.

தேர்த்திருவிழாவில் ஆறுமுகப் பெருமான் சித்திரத்தேரில் ஏறிவந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கின்றார். வெள்ளம்போல் திரண்டுவரும் மக்கள் கூட்டம் தம்மை மறந்து பக்திப் பரவச நிலையில் முருகனை வழிபடும் காட்சி அற்புதமாக இருக்கும். ஆடியும் பாடியும் அழுதும் தொழுதும் அடியார்கள் கந்தவேட்பெருமானை வழிபடுவார்கள்.

"ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத்தேடுவதும் நின்னடியார் செய்கை பராபரனே" என்ற தாயுமான சுவாமிகளின் வாக்கின் உண்மை நிலையினை இங்கே தரிசிக்கலாம்.

நல்லைக்கந்தனின் மணியோசை நாதம் யாழ்ப்பாணக்குடாநாட்டின் பலகிராமங்களில் வாழும் மக்களிடம் முருகப்பெருமானின் நினைப்பை ஏற்படுத்துகின்ற ஈழ மணித் திருநாடு மீண்டும் சிவ பூமியாக மாறவும் ஈழத் தமிழர் சமுதாயத்தின் வாழ்வில் சாந்தியும் சமாதானமும் நிலவவும் நமது அடுத்த சந்ததி இந்த மண்ணில் நிம்மதியாக வாழவும் பேசும் தெய்வமாக நின்று பேரருள் புரிகின்ற நல்லைக் கந்தனின் திருவருளை வேண்டி அனைவரும் பிரார்த்திப்போமாக!

சிவத்தமிழ் வித்தகர்,
சிவ.மகாலிங்கம்

# நல்லூர் ஆலய சூழலில்...

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அனுசரணையுடன் நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று புதன்கிழமை எ.கே. கருணாகரன் வழங்கும் இசையரங்கம் இடம்பெறும். இந்நிகழ்வில் அணிசெய் கலைஞர்களாக வயலின் கே. குகபரன், மிருதங்கம் எம்.மாதவன், முகர்சிங், எஸ் செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீக சிந்தனை, சமயச் சொற்பொழிவு, கலை நிகழ்வுகள் என்பன உற்சவ காலத்தில் தினமும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. இதற்கமைய இன்றைய நிகழ்வாக காலை அழகேசன் அமிர்தசிந்துஜன், பரமேஸ்வரன் கௌரீசன் ஆகியோரின் பண்ணிசைக் கச்சேரியும் பொன்னாலை வரதராஜர் கோவில் கண்ணன் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும் இடம்பெறும். மாலை எம்.பி. ஸ்ரீந்திரன் வழங்கும் இந்துக்களின் **மெஞ்ஞானமே இன்றைய விஞ்ஞானம்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறும். தொடர்ந்து பெரியவிளான் வடகேசரி அறநெறிப் பாடசாலை, மல்லாகம் நீலியம்பனைப் பிள்ளையார் அறநெறிப்பாடசாலை, நாவற்குழி அறிவொளி மன்ற அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் திருமதி. கோகிலத்வனி விஜயராகவன் வழங்கும் வீணைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறும்.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் தெய்வீகப் பேருரை, கலை நிகழ்வு, மாணவர் சொற்பொழிவு, கலைஞர் கௌரவிப்பு நிகழ்வுகள் மஹோற்சவ காலங்களில் தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 8 மணிவரை நல்லூர் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் நடைபெறும். இதற்கமைய இன்று சைவமணி சண்முகரத்தினம் வழங்கும் **பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு சர்வதேச இந்து குருமார் ஒன்றியத்தின் பிரம்மகான சபா நடத்தும் தெய்வீக இசைச் சங்கம நிகழ்வு மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது. இதற்கமைய இன்று புதன்கிழமை சுன்னாகம் இசைக்கலா வித்தகர் சோம உமாரமணக் குருக்கள் வழங்கும் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது.


• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நல்லைக் குருமணியின் பிரதமவாரிசு கானகதாவாரிதி,பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா வழங்கும் **பாரதவம்சம்** பற்றிய இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் இன்று புதன்கிழமை **கர்ணன்** என்னும் விடயப் பொருளிலான இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு மாலை 7.15 மணி தொடக்கம் 7.45 மணி வரை யாழ். சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றி வருகின்றார். இந்நிகழ்வில் இன்று புதன்கிழமை **நம்மால் முடியும்** என்னும் விடயப் பொருளிலான சொற்பொழிவை ஆற்றவுள்ளார். (7)

# நல்லூரான் திருவடிக்கு தேர்த் திருவிழா



## அன்பருளக் கவலைகளை அகற்றியருள்வாயே!



ஆடும் மயில் ஏறி மகிழ் அழகு முகம் ஒன்றே
அடியவரைத் தேடிவரும் அறிவு முகம் ஒன்றே
கூடிவரும் மாதருடன் குலவு முகம் ஒன்றே
கும்பிடுமெம் குறையழிக்கும் கோல முகம் ஒன்றே

நாடி வரும் நல்லவரை நயக்கும் முகம் ஒன்றே
நல்லையினில் ஒளிபரப்பும் ஞானமுகம் ஒன்றே
ஆடும் மணித் தேரில்வரும் ஆறுமுகத்தரசே!
அன்பருளக் கவலைகளை அகற்றியருள் வாயே.

சிவசரவணபவன், சுன்னாகம்.

## தேரேறி வந்து துயர் தீர்ப்பாய் வேலவா!



நல்லூரில் வீற்றிருந்து நல்லாட்சி புரிபவனே!
அலங்காரக் கந்தனாக அருளைப் புரிபவனே!
அல்லல்படும் மக்களது துயர் நீங்கி- இத்தரணிதனில்
சாந்தி, சமாதானம், மனிதநேயம் மீண்டும் மலர
தேரேறி வந்து துயர் தீர்ப்பாய் வேலவா!

வி.இராசநாயகம், நயினை.

## நல்லூரானே தஞ்சமென்று வணங்குவோமே!



போரோங்கி பொலிவிழந்த யாழில்
பாரோங்க ஆட்சிபுரியும் குமரன்
சீரோங்க சங்கிலியன் ஆண்ட மண்ணில்
வேரோடி உலகெலாம் ஆன்மீக
விழுது விட்டருள் புரியும் நல்லூரான்
தேரோடி திருவருள் புரிய தீங்கில்லையே
நாடோடியாய் வாழும் எம்மவர்க்கெல்லாம்
நல்லூரானே தஞ்சமென்று வணங்குவோமே

சின்னத்தம்பி- பத்மராஜா, செங்குந்தாவீதி.

## தேரேறும் கந்தா துணை நீ ஐயா!



தேரேறும் திருக்காட்சி கண்டாலய்யா- என்
தேகத்தில் வலிகூடத் தங்காதைய்யா
பரிவாரம் புடைசூழத் தேரேறய்யா- இந்தப்
பாராளும் துயரை நீ பந்தாடய்யா
ஓராறு முகம்கொண்ட என் வேலய்யா- எந்த
திசைநின்று தொழுதாலும காண்பாயய்யா
யார்யாரு அழைத்தாலும் நீ கேளய்யா- இங்கே
ஆற்றாமல் அழுவோர்க்கு துணை நீ ஐயா

வித்தகக் கவிஞர் வேலணையூர், சுரேஷ்.

## தேரேறி வருகின்றான் நல்லூரான்



பாரெங்கும் புகழ் கொண்ட நல்லூரான்
பக்தர்களைக் காத்திடவே தேரேறி வருகின்றான்
வேரோடு வினையகற்றும் வடிவேலன்
வேண்டுதல்கள் நிறைவேற்ற தேரேறி வருகின்றான்
நாற்றிசையும் பக்தர் புடைளசூழ
நற்றமிழைக் காத்திடவே தேரேறி வருகின்றான்
போற்றிடும் யாவருக்கும் பொன்னான வாழ்வளிக்க
பொங்குதமிழ்க் குமரன் தேரேறி வருகின்றான்.

மு.முத்துக்குமார், மானிப்பாய்.

## நல்லூர் கந்தன் அநுபூதி



முடியா முதலே முருகா முருகே
வடிவா னவனே வழிபட் டுருகும்
அடியார் துயர்போக் கிடவே யுடனே
விடிவாய் வருவாய் விறல் நல்லூரா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

எல்லாரும் ஏறி இளைத்த குதிரையில்
சக்கடத்தார் ஏறி சறுக்கி விழுந்தாராம்.
- தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இலங்கை அரசின் பதிலளிப்பு என்பது தமிழ் மக்களுக்கானதாக இருக்க வேண்டும்

நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் தொடர்பில் அமைச்சர்கள் பலரும் எதிர்ப்புக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இவர்களின் கருத்துக்களை பார்க்கும்போது, நவநீதம்பிள்ளை ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் என்ற அடிப்படையில் இலங்கைக்கு விஜயம் செய்யாதவராகவும் அவர் தனிப்பட்ட விஜயத்தை மேற்கொண்டவர் போலவும் பொருள்படுகிறது.

ஐ.நா. என்ற அமைப்பின் ஏற்பாடுகள் உலகில் அமைதியை ஏற்படுத்துவதாகும்.

முரண்பாடுகள், வன்முறைகள், அடக்குமுறைகள், அடிமைத்தனங்கள், இனத்துவ ரீதியான பழிவாங்கல்கள் போன்ற மனித சுதந்திரத்திற்கு கேடு விளைவிக்கும் அத்தனை விடயங்களிலும் கரிசனை கொள்வது ஐ.நா. சபையின் கடமைகளில் ஒன்றாகும்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஐ.நா. என்ற அமைப்பின் கனதிகாத்திரத்தை தெரிந்து கொள்ளாதவர்கள் போல் இலங்கையின் அமைச்சர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது இலங்கை ஆட்சியாளர்களின் பக்கசார்பான அரசாட்சிக்குத் தக்க சான்றாகும்.

ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்களின் கருத்துக்களை உன்னிப்பாகக் கேட்டறிவதும், அவர் சுட்டிக்காட்டும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதும், இலங்கையில் முழு இனங்களும் சம உரிமையுடன் வாழ்வதற்கான சூழமைவை ஏற்படுத்துவதுமே அரசின் கடமைகளாக இருக்க முடியும்.

இதைவிடுத்து ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளரின் இலங்கை வருகை தொடர்பில் கண்டபாட்டில் கதைப்பதானது இலங்கை இன்னமும் மனிதவுரிமைகளைப் புரிந்து கொள்ளாத நாடு என்று தீர்மானம் எடுப்பதற்கு வழி வகுக்கும்.

அதேநேரம், நவநீதம்பிள்ளை அவர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்தபோது, போர்க்காலத்தில் காணாமல் போனவர்களின் உறவினர்கள் கதறி அழுத துயரம் சாதாரணமானது அல்ல. காணாமல்போன தங்கள் பிள்ளைகளை மீட்டுத்தாருங்கள் எனப் பெற்றோரும் உறவுகளும் பிள்ளைகளும் கதறி அழுத அவலக் குரலை கேட்காத வகையில் நவநீதம்பிள்ளையின் வழிப்பாதை மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம்.

ஆனால், எவ்வளவுதான் படையினரைக் குவித்து வைத்திருந்தாலும் தன் பிள்ளைக்காக தாய் கண்ணீர் விடுவதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என்பது நிரூபணமாகியுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட நிட்டூரம் என்பது நவநீதம்பிள்ளைக்கு பதிலளிப்பதன் ஊடாகவோ அல்லது காணாமல் போனோரின் உறவுகளின் கதறல்களை நவநீதம்பிள்ளைக்கு கேட்காமல் செய்வதன் மூலமோ மறைக்கப்பட்டுப் போகக் கூடியது அல்ல.

போரின் வடுக்கள் தந்த இழப்பை தங்கள் இதயங்களில் சுமந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் தங்கள் இழப்புக்கான ஆற்றுகை கிடைத்தாக வேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்களின் பிரச்சினை. எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

இதைவிடுத்து அறிக்கைகளில் பதிலளித்து எதையும் சாதித்துவிட முடியாது என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பில் இலங்கைக்கு எவரும் வந்து போகலாம். வந்து போகின்றவர்கள், அரசுக்கு ஆதரவாகவோ அன்றி தமிழ் மக்களுக்கு நியாயமாகவோ நடந்து கொள்ளலாம்.

ஆனால், இலங்கை அரசின் பதிலளிப்பு என்பது தமிழ் மக்களுக்கானதாக இருக்க வேண்டுமென்பதை எக்கணத்திலும் எவரும் மறந்துவிடலாகாது.

# சர்வதேச பாதுகாப்புக் கருத்தரங்கில் சுப்பிரமணியன் சுவாமி பங்கேற்பு

கொழும்பு கலதாரி நட்சத்திர விடுதியில் நேற்று ஆரம்பமான படைத்தரப்பின் சர்வதேச பாதுகாப்புக் கருத்தரங்கில் பாரதிய ஜனதாக் கட்சியின் உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி பங்கேற்றுள்ளார்.

போருக்கு பிந்திய இலங்கை சவால்களும் பிராந்திய உறுதிப்பாடும் என்ற தொனிப்பொருளில் நாளை 5 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் கொழும்பைத் தளமாகக் கொண்ட தூதரகங்களின் இராஜதந்திரிகள் மற்றும் பாதுகாப்பு ஆலோசகர்கள் தவிர 66 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

இக் கருத்தரங்கில் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் பிரதம விருந்தினர்களாகப் பங்கேற்றுள்ளனர்.

போருக்குப் பின்னரான மீள்கட்டுமானம், நல்லிணக்க முயற்சிகள், பிராந்திய உறுதிப்பாடு மற்றும் பிராந்திய பூகோள பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் குறித்து இக்கருத்தரங்கில் முக்கிய கவனம் செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீனா, பங்களாதேஷ், ஜேர்மனி, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளைச் சேர்ந்த எட்டுப் பேச்சாளர்கள் இக்கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர். (எ-11)

# பகிடிவதையில் ஈடுபட்டால் உடன் வெளியேற்றப்படுவர்

## கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கல்வியியற் கல்லூரிகளில் பகிடிவதையில் ஈடுபடுபவர்கள் உடனடியாக கல்லூரிகளிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கல்வி அமைச்சில் நடைபெற்ற அதிகாரிகளுடனான விசேட சந்திப்பொன்றின் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தொடர்ந்து கூறுகையில்,

கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது உடல், உள ரீதியாகவோ அல்லது வேறு எந்தவிதமான முறையிலோ பகிடிவதை செய்வது கண்டுபிடிக்கப்படுமாயின் அவர்களுக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர்கள் உடனடியாக கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கல்வியியற் கல்லூரிகள் என்பது சிறந்த ஆசிரியர்களை உருவாக்கும் ஒரு சிறந்த இடம். இது மன நோய்க் காரர்களுக்குரிய இடமல்ல. எதிர்கால சந்ததியினராகிய மாணவர்களுக்காக தெளிவான மனநிலையுடன் சேவையாற்ற வேண்டியவர்களை உருவாக்கும் இடமே கல்வியியற் கல்லூரிகள். பிள்ளைகள் என்பவர்கள் பெறுமதி வாய்ந்தவர்கள். ஆசிரியர்கள் புத்தாக்கங்களுடன் கற்பித்தல் நடவடிக்கைகளை அன்பாக கருணை உள்ளத்துடன் மாணவர்களின் கௌரவத்தை பெற்றவர்களாக முன்னெடுக்க வேண்டும். இளம் ஆசிரியர்கள் கல்வி தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்வதுடன் வேறு எவரும் செய்யாத ஒரு விடயத்தில் அல்லது வேறு துறையில் திறமையானவர் என்பதை காண்பிக்க வேண்டும்.

2013 இல் இதுவரை தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்காக கல்வியியற் கல்லூரி ஆசிரியர்கள் 2 ஆயிரத்து 697 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். தேசிய பாடசாலைகளுக்காக ஆயிரத்து 65 ஆசிரியர்களும் மாகாண பாடசாலைகளுக்காக ஆயிரத்து 632 ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# தேர்தல் பணிகளில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்-பவ்ரல்

தேர்தல் நடவடிக்கைகளுக்கு சமுர்த்தி உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துகின்றமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இந் நிலைமை தொடர்பில் சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆராய்ச்சி கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் அரச சேவையுடன் தொடர்புடைய பட்டதாரிகள் கல்வி சேவையுடன் தொடர்புடைய அதிகாரிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்பது தொடர்பில் அறியக் கிடைத்ததாக பவ்ரல் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

எதிர்காலத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்களை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தாதிருப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில், சமுர்த்தி பணிப்பாளர் நாயகத்திற்கு விசேட கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளதாக அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் தாம் வினவிய போது அவ்வாறானதொரு கடிதம் தமக்கு கிடைக்கவில்லை எனவும் எனினும் தாம் ஆராய்ந்து பார்ப்பதாக சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் ஆர்.பி.பீ. திலக சிறி குறிப்பிட்டார். (அ-2)

## ஜோதிலிங்க தரிசனம்

யாழ்.பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தினால் நடத்தப்படும் பன்னிரு ஜோதிலிங்க தரிசன நிகழ்வு எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் வீரமாகாளியம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-5)

## வங்கிச் சேவை

வல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவத்தை முன்னிட்டு செலான் வங்கி தனது வாடிக்கையாளர் சேவை நிலையத்தை கோவில் வளாகத்தில் தினமும் காலை 9.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை நடத்தவுள்ளதாக நெல்லியடி செலான் வங்கி கிளை அறிவித்துள்ளது. (அ)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### குன்றாத அன்பு வேண்டும்



❖ பெண்ணாசையிலும் பொன்னாசையிலும் மனதை அலையவிட்டு நாமத்தை மாத்திரம் நாவால் உச்சரிப்பதால் என்ன பலன்?

❖ தெரிந்தோ, தெரியாமலோ, தன்னறிவுடனோ, அறிவில்லாமலேயோ எந்த ஸ்திதியிலாகட்டும் ஒருவன் பகவந் நாமத்தைச் சொல்வானானால் அவனுக்கு அதன் பலன் கிட்டும். தானாகவே விரும்பி ஆற்றுக்குப்போய்க் குளிப்பவனுக்கும் வேறொருவனால் ஆற்றல் தள்ளப்படுபவனுக்கும் அல்லது தூங்கும்போது வேறொருவன் கொட்டிய தண்ணீரில் நனைபவனுக்கும் ஸ்நானபலன் ஒருங்கே ஏற்படுகிறது அல்லவா?

❖ பக்தி வேண்டும், குன்றாத அன்பு வேண்டும்; அநித்யப் பொருட்களான பொன், புகழ், போகம் இவைகளிலுள்ள பற்றுதல் அகலவேண்டும்.

❖ பக்தியுடன் பகவந்நாமத்தைப்பாடு. அப்போது மலைபோலக் குவிந்திருக்கும் உனது பாவங்கள் எல்லாம் நெருப்புப் பொறி ஒன்றினால் மலைபோலக் குவிந்த பஞ்சுப் பொதிகள் எரிந்து சாம்பலாவதைப் போல நசித்துப்போய்விடும்.

❖ உலக வாழ்க்கையினர் செய்யும் பக்தி சாதனைகள் தற்காலிகமேயாம். அவைகள் நிலையான அடையாளங்களை உண்டாக்குவது இல்லை.

❖ சாந்தமான இடத்தில் உட்கார்ந்து கொண்டு பகவந்நாமத்தை மௌனமாக உச்சரிப்பதுதான் ஜெபம். ஏகாக்ர சித்தத்துடன் ஒருவன் ஜெபம் செய்வானானால் அவன் நிச்சயமாக ஈஸ்வரனை அடைவான்.

❖ கைகளினால் தாளம் போட்டுக்கொண்டே இனிமையான ஹரிநாம சங்கீர்த்தனம் செய்; இவ்வாறு செய்தால் உன் மனதிலுள்ள தீய சிந்தனைகள் எல்லாம் அகன்றுவிடும்.

❖ அதைரியம், துவேஷம், பயம் இவைகள் குடிகொண்டிருக்கும் இடத்திற்கு ஈஸ்வரன் வருவதில்லை.

## ஆறு அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து

# ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்க ஏற்பாடு

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்கள், எதிர்வரும் 14 ஆம் திகதி முல்லைத்தீவிற்கு வருகை தரவுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் ஆறு அம்சக் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளனர்.**

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, தெற்கு, மத்தி ஆகிய கிராம சேவையாளர் பிரிவில் உள்ள குடும்பங்கள் கடந்த 1632 ஆம் ஆண்டு முதல் இப் பகுதியில் வாழ்ந்து வந்தனர். இந் நிலையில் கடந்த 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 22 ஆம் திகதி அரசாங்கத்தால் 24 மணித்தியாலத் திற்குள் 2ஆயி ரத்து 500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இங்கிருந்து வெளியேற்றப்பட்டன.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட குடும்பங்கள் 27,28 வருடங்களின் பின்னர் 2011, 2012 ஆம் ஆண்டுக்ளில் மேற்குறித்த கிராம சேவையாளர் பிரிவுகளில் 76 கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு தற்போது ஆயிரத்து86 கும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்நிலையில் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முகமாக 6 அம்சக் கோரிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளன.

இந்த மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

* இங்கு 821 விவசாயக்குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்களுக்கான வெலிஓயா (மணலாறு) பிரதேச செயலர் பிரி வில் உள்ள 7 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஏக்கர் வயற்காணிகளை மீட்டுத்தர வேண்டும்.

* கொக்குத்தொடுவாய் கிராமங்கள், ஆலயம் மற்றும் பாடசாலை, ஊடாக இராணுவத்தால் அமைக்கப்பட்ட நீண்ட மண் அணைகள் அகற்றப்பட வேண்டும்.

* கொக்கிளாய் கிராம சேவையாளர் பிரிவில் 254 வெளி மாவட்ட மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆதனால் கடந்த 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பகுதியில் தொழில் செய்த 27 வெளிமாவட்ட மீனவர்களத் தவிர்த்து ஏனைய வெளி மாவட்ட மீனவர்கள் யாவரும் வெளியேற்றப்படல் வேண்டும்.

* கொக்கிளாய் ஆற்றில் சட்டத்தால் தடை செய்யப்பட்ட படகு, இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற மீன்பிடிமுறைகள் முற்றாக தடை செய்யப்படல் வேண்டும்.

* கொக்கிளாய் அறிமுகப்பிள்ளையார் ஆலய வளாகத்தில் இருந்த பிள்ளையார் ஆலயம் அழிக்கப்பட்டு நிறுவப்பட்ட புத்தர் சிலையை அகற்றி முன்பிருந்ததைப் போன்று அதே இடத்தில்பிள்ளையார்ஆலயம்அமைக்கப்படல் வேண்டும்.

* கடந்த 1984 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்ட மக்களை முன்னுரிமைப்படுத்திய அனைத்து குடும்பங்களுக்கும் நிரந்தர வீட்டுத்திட்டம் வழங்க வேண்டும் என ஆறு அம்சங்கள் அடங்கியுள்ளன. இந்த மகஜரே ஜனாதிபதியிடம் கையளிக்கப் படவுள்ளது. (ம-267)




## பேய்ப்பாறைப்பிட்டி கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறல்

கிளிநொச்சிமாவட்ட கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பேய்ப்பாறைப்பிட்டி கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்ந்த வண்ணம் உள்ளதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இக்கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் , இப் பகுதி மீனவர்களின் வலைகளை அறுத்து நாசம் செய்துவிட்டு சென்றுள்ளனர்.

அப்பகுதி மீனவர்கள் இது தொடர்பாக கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நிர்க்கதியாக்கப்பட்டு பின் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட இம் மக்கள் கடற்றொழிலையே நம்பி வாழ்கின்றனர்.

இந்நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் , இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர்கள் கவனம் எடுத்து இதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (ம-264)

## ஏர்பூட்டு விழா

(பூநகரி)

பூநகரி கமநலசேவை பிரிவில் வருடாந்தம் நடைபெறும் ஏர்பூட்டு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி அதிகாலை செல்லையா தீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூசைகளோடு ஆரம்பித்து நாள் விதைப்பு ஏர்பூட்டி இடம்பெறும் என ஆலய நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

வித்தி நாள் என்னும் இந் நிகழ்வையொட்டி காலபோக விதைப்பு ஆரம்பமாகவுள்ளது. இவ்வாண்டு பூநகரிப் பகுதியில் 12 ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏக்கரில் காலபோக விவசாயச் செய்கை இடம்பெறவுள்ளதாக பூநகரி கமநல சேவை அலுவலர் திருமதி நிர்மலாதேவி பாலச்சந்திரன் தெரிவித்தார். (ம-84)

# வடமாகாண விவசாய கண்காட்சி வட்டக்கச்சியில் ஆரம்பமாகியது

(வட்டக்கச்சி)

வடமாகாணத்தின் இவ் வாண்டுக்கான விவசாயக் கண்காட்சி சூழலுடன் நட்புறவான புதுயுகம் நோக்கி எனும் தொனிப் பொருளில் நேற்று முன்தினம் கிளிநொச்சி வட் டக்கச்சி விவசாயப் பண்ணையில் ஆரம்பமாகியுள்ளது.

இவ் விவசாயக் கண்காட்சி எதிர்வரும் 6ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறும்.

இக் கண்காட்சியில் மத்திய விவசாயத் திணைக்களம், மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், மாகாண நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண காணித் திணைக்களம், மாகாண நன்னீர் மீன்பிடித் திணைக்களம், மாகாண் சுதேச மருத்துவ திணைக்களம், மாகாண கமநல அபிவிருத்தி திணைக்களம், வானிலை அவதான நிலையம், தென்னை பயிர்ச்செய்கை சபை, தென்னை அபிவிருத்தி அதிகார சபை, பனைவள அபிவிருத்திச் சபை, மரமுந்திரிகை கூட்டுத்தாபனம், விதை உற்பத்தி திணைக்களம், வங்கிகள், தனியார் நிறுவனங்கள் என்பன பங்கேற்றுள்ளன.

விவசாயிகள், உள்ளூர் உற்பத்தியாளர்கள், சுயதொழில் முயற்சியாளர்களின் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கண்காட்சி தினமும் காலை 8.30 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெற்றுவருகின்றது.

இக் கண்காட்சியில் விவசாய உற்பத்தி புள்ளி விபரங்களும், தகவல்களும், உள்நாட்டு மரக்கறிகள், மேல்நாட்டு மரக்கறிகள், கிழங்கு பயிர்கள், இலைக்கறிகள், தானியங்கள், அவரைப் பயிர்கள், எண்ணெய்ப் பயிர்கள், பழப்பயிர்கள் ஆகியவற்றின் உற்பத்தி திறனை மேம்படுத்தல்.

வீட்டுத் தோட்டம், கால்நடை வளர்ப்பை ஊக்குவித்தல், இலங்கை மண் வளம், மண் சம்பந்தமான பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் காணுதல் என்பனவும் மேலும் அறுவடைக்கு பின்னரான இழப்புக்களைக் குறைத்தலும் தரத்தை மேம்படுத்தலும் உற்பத்திப் பொருட்களின் பெறுமானத்தை அதிகரித்தல், விவசாய அடிப்படையிலான கைத்தொழில்முயற்சிகள், விவசாய ஆராய்ச்சி செயற்பாடுகள், பண்ணை விவசாய இயந்திரங்களை மேம்படுத்தல், விதை உற்பத்திகள், காளான் செய்கை, சிறு ஏற்றுமதிப் பயிர்கள், பணப் பயிர்கள், நீர்முகாமைத்துவம், நிலத்தடி நீர் சேமிப்பும், விலங்கு வேளாண்மை, நன்னீர் மீன் வளர்ப்பு, மூலிகைத் தாவரவிருத்தியும் பண்பாடும், தென்னை அபிவிருத்தி, மர முந்திரிகை அபிவிருத்தி உட்பட பல தொழில் நுட்ப விடயங்களும் இடம்பெற்று வருகின்றன.

தற்காலத்துக்கு ஏற்றவாறு எவ்வாறு நகர்ப்புற வீடுகளில் வீட்டுத் தோட்டத்தை உண்டு பண்ணுதல், சேதன பசளை தயாரித்தல் முறைமை என்பன பற்றியும் விளக்கமளிக்கப் படுகின்றது.

பார்வையிட வருவோரின் மனதை கொள்ளை கொள்ளும் விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள இக் கண்காட்சியை தினந்தோறும் நூற்றுக் கணக்கான பாடசாலை மாணவர்களும் விவசாயிகளும் பொது மக்களும் பார்வையிட்டு வருகின்றனர். (அ-4)









வடமாகாணத்தின் இவ்வாண்டிற்கான விவசாயக் கண்காட்சி நேற்றுமுன்தினம் வட்டக்கச்சி விவசாயப் பண்ணையில் ஆரம்பமானது. இந்நிகழ்வினை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நாடாவெட்டி ஆரம்பித்து வைப்பதையும் பாடசாலை மாணவர்கள் விவசாயக் கண்காட்சியை பார்வையிடுவதையும் கலை நிகழ்வு இடம் பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-உ.சாளீன், என்.குமார்)

உங்கள் முகம். மேனி. பளபளக்கவேண்டுமா?
எரிகாயங்களினால் ஏற்பட்ட தழும்புகள்
மாறவேண்டுமா?
இன்றே பாவியுங்கள்

'றோயல் ஒலிவ் ஒயில்'
Product of Spain

உணவுத் தேவைகளுக்கு ஏற்ற சுத்தமான ஒலிவ் ஒயில்

ஏக விநியோகஸ்தர்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2567

Re packed By :
**Royal Industries**
No.221/1, Adamally Building,
Wolfendhal Street,
Colombo - 12. T.P: 0777277670
அனைத்து பாமசிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி/4169)





# நவநீதம்பிள்ளை...

நவநீதம்பிள்ளையை அனுமதித்திருக்கவே கூடாது.

இலங்கை வெளிப்படைக் கொள்கையுடன் செயற்பட்ட போதிலும் நவநீதம்பிள்ளை புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டிலிருந்தே கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கையின் உள்ளக அரசியல் விவகாரங்களில் நவநீதம்பிள்ளை தலையிட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். அதேபோன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பேச்சைக் கேட்டு சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுவது எவ்விதத்திலும் நியாயம் இல்லை. தான் நேர்மையானவள் என்பதைக்காட்டிக் கொள்ள போலியாக விடுதலைப் புலிகளை விமர்சித்தமை உலக மகா நடிப்பு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே நவநீதம்பிள்ளை ஆரம்ப காலம் தொட்டே செயற்பட்டார். இலங்கை விஜயத்தில் தனக்கு சாதகமான சாட்சிகளையும் தடயங்களையும் வடக்கு மற்றும் கிழக்கிற்கான விஜயத்தின் போது நவநீதம்பிள்ளை சேகரித்துக் கொண்டதாகவும் குறிப்பிட்டார். (எ-11)


நல்லூர்க் கந்தப் பெருமான் நேற்று சப்பறத்தில் எழுந்தருளிய காட்சி...

## மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தல் - 21.09.2013

### வாக்களித்தலும் விருப்புத் தெரிவித்தலும் பற்றிய சுருக்கமான விளக்கம்

## வாக்குச்சீட்டின் மாதிரிப் படிவம்

அடியிதழ் இலக்கம்

| | | |
|---|---|---|
| "அ" கட்சி | ✸ | |
| "ஆ" கட்சி | ✸ | |
| "இ" கட்சி | ✸ | |
| "ஈ" கட்சி | ✸ | |
| "உ" கட்சி | ✸ | |
| சுயேச்சைக் குழு 1 | ✸ | |
| சுயேச்சைக் குழு 2 | ✸ | |
| சுயேச்சைக் குழு 3 | ✸ | |
| சுயேச்சைக் குழு 4 | ✸ | |
| சுயேச்சைக் குழு 5 | ✸ | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | | | | | | |

✸ ஒவ்வொரு கட்சியின் அல்லது குழுவின் சின்னம்.

1. இது வாக்குச்சீட்டின் மாதிரியொன்று மட்டுமே.
2. அரசியற் கட்சிகளினதும் சுயேச்சைக் குழுக்களினதும் பெயர்கள், அவைகளின் சின்னங்களுடன் மேற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு சின்னத்திற்கும் எதிரே வெற்றுக்கூடொன்று உள்ளது. இதில் ஏதேனுமொரு கூடொன்றில் உங்கள் வாக்கை அடையாளமிடலாம். வாக்களிக்கும் போது நீங்கள் விரும்பும் சின்னத்திற்கு எதிரேயுள்ள வெற்றுக்கூட்டில் "புள்ளடி (X)" யிடல் வேண்டும்.
3. ஒவ்வொரு வேட்பாளருக்கும் குறித்தொதுக்கப்பட்ட தொடரிலக்கம் ஒரு வரிசையில் 10 என்றவாறு வாக்குச்சீட்டின் கீழ்ப்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. விருப்பு வாக்கொன்றை அடையாளமிடும்போது, நீங்கள் விரும்பும் வேட்பாளரின் இலக்கத்திற்கு மேலே "புள்ளடி ( X )" இடலாம். மூன்று வேட்பாளர்களுக்கு மேற்படாதவாறு அதாவது அவ்விலக்கங்கள் மூன்றுக்கு மேற்படாதவாறு உங்கள் விருப்புக்களை அடையாளமிடலாம்.
4. வாக்கொன்று அடையாளமிடப்படாத வாக்குச்சீட்டு செல்லுபடியற்றதாகும். அது எவ்வித பெறுமதியுமற்றதோடு அல்லாமல் நிராகரிக்கவும்படும். ஆகையினால் முதலில் வாக்கை அடையாளமிட்டு, அதன் பின் விருப்பமாயின் விருப்புக்களை அடையாளமிடுவதும் பொருத்தமாகும் என்பதை தயவு கூர்ந்து நினைவிற் கொள்ளவும்.

தேர்தல்கள் செயலகம்,
இராஜகிரிய.
03.09.2013

மஹிந்த தேசப்பிரிய,
தேர்தல்கள் ஆணையாளர்.

(சி-4592)

# உடைக்கப்பட்டது

தம்புள்ளையில் உள்ள காளி கோயிலின மூலவிக்கிரகம் நேற்று முன் தினம் இரவு பௌத்த அடிப்படைவாதிகளால் எடுத்துச் செல்லப்பட்டு உடைத்தெறியப்பட்டுள்ளது.

உடைக்கப்பட்ட விக்கிரமகத்தின் பாகங்கள் வேறு இடம் ஒன்றில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

குறித்த கோயில் மற்றும் அருகில் உள்ள பள்ளிவாசல் ஆகியவற்றை அகற்ற வேண்டும் என்று அங்குள்ள பௌத்த விகாராதிபதி தொடர்ந்தும் அச்சுறுத்தல் விடுத்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# மிதிவெடி விபத்து பணியாளர் படுகாயம்

மிதி வெடியகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த பெண்ணொருவர் மிதிவெடி வெடித்ததில் படுகாயமடைந்துள்ளார். இவ் வெடிப்புச் சம்பவம் நேற்று முன்தினம் முகமாலையில் இடம்பெற்றுள்ளது.

இதில் கிளிநொச்சியினைச் சேர்ந்த எல்.இலங்கேஸ்வரி (வயது 36) எனும் ஹலோரஸ்ட் பணியாளரே படுகாயமடைந்தவராவார்.

குறித்த பெண் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை தவறுதலாக மிதிவெடி வெடித்துள்ளது. இதில் படுகாயமடைந்த பணியாளருக்கு ஹலோ ரஸ்ட் நிறுவனத்தினர் முதலுதவி அளித்து அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (எ-4)


நல்லைக் குமரனே வருக! வருக!! வருக!! தேரேறியே...

YAMAHA

விசேட விலைக்கழிவு

நீங்கள் விரும்பும் YAMAHA
மோட்டார் சைக்கிள் இப்போது
புதிய வர்ணங்களிலும்
புதிய விலைகளிலும்





| | பழைய விலை | புதிய விலை |
|---|---|---|
| Ray | 215,000.00 | 211,000.00 |
| SZ-X | 316,000.00 | 278,000.00 |
| SZ-R | 326,000.00 | 298,000.00 |
| FZ-16 | 375,000.00 | 335,000.00 |
| FZ-S | 399,000.00 | 347,000.00 |
| Fazer | 436,900.00 | 393,000.00 |

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

உங்கள் தெரிவுகளுக்கு இன்றே முந்துங்கள்

A.M.W. (Pvt) Ltd இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்

**டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்**

62/16, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 0776623824/ 2224040

குஞ்சர் கடைச் சந்தி, நெல்லியடி.
0779893343



**துருக்கி வேலை அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய விளக்கம்**

(துருக்கி ஐரோப்பிய யூனியனில் உள்ள ஓர் நாடு)

✸ ஆண், பெண் இருபாலாருக்கும் வெற்றிடங்கள் உள்ளன.

**WORK PERMIT VISA**

✸ புதுப்பித்துக் கொள்ளக்கூடிய இரண்டு வருட வேலை ஒப்பந்தம்
✸ மாதாந்த சம்பளம் *690 Euro (690 x 180 = 124,200/=)*

**வேலை: பொதி செய்தல் (Packing Section)**

✸ மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்
(வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து சட்டரீதியான பயணம்)
✸ நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

முன்பதிவுகளுக்கு மட்டும் : 0214921831, 0214921832

**அனி இன்டர்நஷனல் எடியுகேஷன் கன்சல்டன்சி சர்விஸ்,**
**இல.72, இலுப்பையடிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**

(3378)

# புலிகள் சார்பு இயக்கங்களின்....

கொழும்பில் இராணுவம் நடத்திய மூன்றாவது பாதுகாப்பு கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதாகக் கூறப்படுவது குறித்த தவறான புரிதல்கள் காரணமாக மற்ற நாடுகளிடம் இது ஒரு பிரச்சினையாக சில சமயங்களில் மாறிவிட்டது.

"இலங்கையில் சீனாவின் ஈடுபாடு என்பது ராஜிய ரீதியிலானதும், பொருளாதார ரீதியிலானதுமாகும் என்பதைப் புரிந்து கொள்வது முக்கியம். சீனா இலங்கையின் வளர்ச்சித் திட்டங்களில் பல ஆண்டுகளாக ஒரு முக்கிய கூட்டாளியாக இருந்து வந்திருக்கிறது. அது இலங்கையின் முக்கிய பொருளாதார திட்டங்கள் பலவற்றுக்கு பெரிய அளவு பங்களிப்பைச் செய்திருக்கிறது. ஆனால் இந்த ஈடுபாட்டை ஏதோ சீனா இலங்கையில் அளவுக்கதிகமான செல்வாக்கு இருப்பதைப் போலக் காட்டி தவறாக சித்தரிக்கப்படுகிறது. இலங்கைக்கு விஜயம் செய்யும் சில முக்கிய நாடுகளின் பாதுகாப்பு அதிகாரிகள் கூட இது பற்றி கேள்வி எழுப்பியிருக்கிறார்கள் என்றார் கோத்தபாய ராஜபக்ஷ.

**"இந்திய உறவில் தமிழகத் தாக்கம்"**

இந்தியாவுடனான நட்பு குறித்து குறிப்பிட்ட பாதுகாப்புச் செயலர் ,

தென்னிந்திய மாநிலமான தமிழ்நாடு காரணமாக, இந்தியா, இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் குறித்து மிகவும் கரிசனை காட்டுகிறது என்றார். இது தேர்தல் சமயத்தில் குறிப்பாக பெரிய அளவு பேசப்படுவதாகவும் அவர் கூறினார்.

இது தவிர மீனவர் பிரச்சினைகள் போன்ற இரு தரப்பு பிரச்சினைகளும் இந்திய-இலங்கை உறவுகளில் தாக்கம் செலுத்துவதாக அவர் கூறினார்.

"சில இரு தரப்பு பிரச்சினைகள் இந்த இரண்டு நாடுகளுக்கிடையே பொதுவாக நிலவும் நல்ல உறவை நெருக்கடிக்குள்ளாக்குகின்றன. உதாரணத்துக்கு இலங்கை கடற்பரப்பில் சட்ட விரோதமாக தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் விஷயம். தெற்காசியாவில் இந்தியா சந்தேகத்துக்கிடமின்றி மிகவும் முக்கியமான, மிகவும் சக்தி வாய்ந்த நாடுதான். ஆனால் இலங்கை ஒரு முழுமையான சுதந்திரமான, இறைமையுள்ள நாடு. இதை இந்தியாவும் அறிந்திருக்கிறது . இலங்கையை அது ஆதரிக்கிறது. இந்த இரு நாடுகளும் அவைகளுக்கிடையே சில சமயம் உருவெடுக்கும் இது போன்ற சில பிரச்சினைகளைத் தாண்டி, ஒரு அர்த்த புஷ்டியான, நெருக்கமான உறவைப் பேணுவது முக்கியம்" என்றார் கோத்தபாய.

**புலி சார்பு இயக்கங்கள் - இலங்கைக்கு சவால்**

போருக்கு பிந்திய இலங்கை எதிர் கொள்ளும் சவால்களைப் பற்றிக் குறிப்பிட்ட கோத்தபாய ராஜபக்ஷ, போர் முடிந்து விட்டாலும், இலங்கை விடுதலைப் புலிகளின் சார்பு இயக்கங்கள் புலம்பெயர் நாடுகளில் நடத்துகின்ற பிரசாரங்களில் சில ஓரளவு வெற்றி பெற்றிருக்கின்றன என்று கூறினார். இதன் விளைவுதான் சமீபத்தில் இலங்கைக்கு ஐ.நா மன்ற மனித உரிமைக் கவுன்சிலின் ஆணையரின் விஜயம் என்றார்.

விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்ட சில குழுக்களில் விடுதலைப் புலிகளால் பயிற்றுவிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் இன்னும் இது போன்ற பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இலங்கையில் கூட ஜனநாயக மைய நீரோட்டத்தில் இயங்கும் சில குழுக்கள் கூட இது போன்ற விடுதலைப்புலி ஆதரவு வெளிநாட்டு அமைப்புகளிடமிருந்து பணம் பெறுகிறார்கள் என்றார் அவர்.

இது போன்று தீவிரவாதம் மீண்டும் தலை தூக்குவதை முறியடிப்பதே இலங்கை எதிர் கொள்ளும் சவால் என்றார் அவர். (எ-11)

கணனி, உதிரிபாகம் விற்பனையும், பழுது பார்த்தலும்
சகல விதமான கணனிகளும் (Laptop & Desktop) CPU, Monitor, LED TV, Printer, UPS என்பன உடனுக்குடன் பழுதுபார்த்துக் கொடுக்கப்படும். உங்கள் கணனிகளை வீடுகளுக்கோ அல்லது நிறுவனங்களுக்கோ வந்து ஒரே நாளில் உத்தரவாதத்துடன் பழுது பார்த்துத் தருகின்றோம்.
சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் கூடிய உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
சிங்கள, ஆங்கில, கணனி வகுப்புகள்
உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், A/L முடித்தவர்களுக்கும், மிக இலகுமுறையில், குறுகிய காலத்தில் குறைந்த கட்டணத்தில் பயிற்சியினை முடித்துக் கொள்ள..
NORTH LEAD No : 328, Staly Road, Jaffna
(ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, Mob : 0772533390, Fax : 222 4460

# மனித உரிமைகளுக்காக பொதுநலவாய மாநாடு பயன்படும் பிரித்தானியா நம்பிக்கை

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை பிரித்தானியா இலங்கையின் மனித உரிமைகள் குறித்த விடயங்களுக்காக பயன்படுத்தும் என்று பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஊடக சுதந்திரம் உட்பட்ட மனித உரிமைகள் குறித்து பிரித்தானியா கவனம் செலுத்தி வருவதாக ஹேக் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் கேள்வி நேரத்தில் கருத்துரைத்த அவர், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டின் போது பிரதமர் கெமருனும் தாமும் பங்கேற்கவுள்ளதாக குறிப்பிட்டார்.

இதன்போது பொதுநலவாய நாடுகளின் தலைவர்களுடன் இணைந்து பிரித்தானியா இலங்கையின் மனித உரிமைகள் குறித்த அழுத்தங்களை கொடுக்கும் என்று ஹேக் தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்து வரும் வாரங்களில் மனித உரிமைகள் குறித்து பிரித்தானியா உட்பட்ட நாடுகள் இலங்கைக்கு அழுத்தங்களை கொடுக்கவுள்ளதாகவும் ஹேக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையின் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதில் பிரித்தானியா அக்கறையுடன் இருப்பதாகவும் ஹேக் சுட்டிக்காட்டியுள்ளார். (எ-11)

# கிணற்றினுள்...

இது தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (எ-85)

# சிறுபான்மை...

நாட்டின் அரசிலிருந்து குறைத்து எங்களுக்கு இருக்கும் பலத்தை குறைக்க முற்படுகிறது.

நாங்கள் முஸ்லிம் மக்களுடன் சேர்ந்து அவர்களுக்கு முன்பு செய்யப்பட்ட தீங்குகளையும்தீமைகளையும் உணர்ந்து அது சம்பந்தமாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து முஸ்லிம் மக்களும் மீளவும் இயன்ற வரை விரைவாக அவர் களின் பகுதிகளில் குடியேறப்பட வேண்டும் என்பதல் பற்றுறுதி கொண்டுள்ளோம்.

அவர்கள் திரும்பி இங்கு மீள் குடியேற ஊக்குவிக்கப் படுவதோடு வாழ்க்கையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அனைத்து வசதிகளையும் வடக்கு மாகாண சபை வழங்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், பொதுச் செயலாளர்மாவை. சேனாதிராஜா உள்ளிட்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், வேட்பாளர்கள் எனப் பலரும பங்கு கொண்டிருந்தனர். (எ-6)

ரிக்கெற் இலவசம், உணவு இலவசம்
இருப்பிடம் இலவசம்
மாதம் 2 இலட்சம் சம்பாதிக்கலாம்.
இது புதிய வரவு!
டென்மார்க்கில் படிக்க, உழைக்க
2 வருட விசா பெற சட்ட ஆலோசனை
வாரத்தில் 4 பேர் மட்டுமே இணைத்துக் கொள்ளப்படுவர்.
* (எல்லா நாட்களும் காலை 8.30 - பி.ப. 6.30 வரை ஆலோசனை)
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(C-4588)




நீரிழிவு நிவாரணிகள்
இவை அனைத்தும் பக்க விளைவுகள் அற்ற மூலிகை மருந்து
- சிறு குறிஞ்சா தேயிலை
- சிறு குறிஞ்சா பவுடர்
- நீரிழிவு அரிசிமா
- நீரிழிவு பானம்
- டீ கோலா
- B.B.G, Oil
தலைமயிர் வளர்ச்சி, இளநரை, தலை இடியைக் கட்டுப்படுத்தும்.
இவற்றைப் பாவித்து பதினைந்து நாட்களில் நீரிழிவை கட்டுப்படுத்தும் என மருத்துவ மாணவர்களின் ஆய்வு மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. குருதியில் குளுக்கோஸ், கொலஸ்ரோலைக் குறைக்கும்.
தொடர்பு:
பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம்
உயிர்நுட்பு (BIO TEC)
131/2, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். தொ.பேசி : 222 0156, 021 4590907
(3856)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது Certificate அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கிகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே.
புதிய வகுப்பு விரைவில்... உடன் பதிவு செய்யவும்...
61, Kachchery-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)



இலவச கணணி, ஆங்கில, வியாபார முகாமைத்துவ கற்கைநெறிகள், தொழில்வாய்ப்புப் பற்றிய வழிகாட்டல் கருத்தரங்கு
கிளிநொச்சியில் ESOFT Shaping Lives, Creating Futures.
கொழும்பு, யாழ் பிரபல விரிவுரையாளர்களினால் A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்ளுக்காக வழங்கப்படுகிறது
அனுமதி இலவசம்
கருத்தரங்கிற்கான ஆசனப் பதிவுகளுக்கு 077 309 9 308
DITEC INTERNATIONAL Diploma in information Technology + DiE Diploma in English
அன்றையதினத்தில் ஆகிய கற்கை நெறிகளுக்கான பதிவுகளுக்கு ரூ.5000 கட்டணக்கழிவு
FREE 4GB Pendrive
2012ல் மட்டும் 20,000 ற்கும் மேற்பட்டோர் பெற்றுக்கொண்ட கற்கைநெறி
ESOFT Shaping Lives, Creating Futures.
ESOFT METRO CAMPUS
Sri Lanka's Largest IT Education Network
இடம் : செல்லா விடுதி [கிளிநொச்சி]
காலம்:- 05.09.2013 மு.ப 9.30 மணி
(சி-4564)
No.01, KANAGAPURAM ROAD, KILINOCHCHI



வாழ்க்கையில் வசந்தம் உருவாக நல்லூர்க் கந்தனை வேண்டுகின்றோம்.
இலங்கையின் தலைசிறந்து விளங்கும் முன்னணியான நிறுவனம்
World Express Services
உலக நாடுகளுக்கான துரித பொதிகள் மற்றும் கடிதங்கள் அனுப்ப எங்களை நாடுங்கள்
தலைமை அலுவலகம்:
338, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு - 15
தொ. பே.: 0112520894
கிளை : 277, பலாலி வீதி, யாழ்ப்பாணம். தொ. பே. 021 222 0356
(Central Nursing Home முன்பாக)
e.mail : worldexpress.ser@gmail.com www.worldexpressservices.com
கிளை : 180/5 புகையிரத நிலைய வீதி, வைரவ புளியங்குளம், வவுனியா.
தொ. பே. : 024 490 3200
(C-4280)




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.